448

448/3-57

REGISTERED No. M. 6165. ந. பை. 13

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

ஆகஸ்ட் 1957.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 JUL 1957
MADRAS

| விஷயம். | பக்கம். |
|---|---|
| இஸ்லாத்தின் இணையில்லா ஏக தெய்வக் கொள்கை | 1 |
| தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள் (ரஹ்மத் பாகவி) .... .... .... .... .... | 7 |
| மண வாழ்க்கை (மாஸ்டர் கமால் பாபு) .... ... .... .... | 11 |
| முகலாய பெண் மணிகள் சரிதை (டி. எப். ஆர். மஆலி ஸாஹிபு-பாகவி) .... | 15 |
| சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது துப்பு துலக்கிய தூயவர் ... ... ... ... | 21 |
| உடல் அமைப்பின் தத்துவம் (சிறுவர் பகுதி) ... | 29 |

[illegible] இஸ்லாம் ஆபீஸ் :

[illegible] ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

JL
Q7ணவ்யு/M24FI
N57
187065

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு
வருஷ சந்தா ரூ. 1–50
தனிப் பிரதி நயா பைஸா. 13
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–00
எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# மஜ்மூஅ முனஜாத்து

சுத்த தமிழ்

(மூன்றும் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் ஹக்கு பேரில் முனஜாத்து, யாஸைய்யிதி மாலெ, யாகுத்பா மாலெ, தலெபாத்திஹா, ஸலவாத்துப் பாட்டு, முத்துமணி மாலெ, பக்தி ஆனந்த பாத்தி முத்து மாலெ, முஹ்யித்தீன் முனஜாத், காஜாபந்தே நவாஸ் முனஜாத்து, ஸரசுவதி மாலெ, காஸீம் புலவர் இன்னிசை, கலியாண வாழ்த்துப் பதங்கள் ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன.

இதன் விலெ ரூ. 0–52

ஷெ அரபுத் தமிழ் விலெ ரூ. 1–32

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.
நெ. 20 ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ, 5.

ٱلْإِسْلَامُ

# பத்ஹுல் இஸ்லாம்

ஆகஸ்டு—1957.

## இஸ்லாத்தின் இணையில்லா ஏக தெய்வக் கொள்கை.

எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவின் கிருபையால், தன்னை 'முஸ்லிம்' என்று கூறிக்கொள்ளும் பாக்யம் பெற்ற ஒவ்வொருவனும், இஸ்லாமியத் தனிப்பெரும் சிறப்பு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு, தன்னை இத்தரணி வாழ் மாந்தர் கோடியனைவரினும் மிகச் சிரேஷ்டமானவனுகவே பாவிக்கின்றுன்; அதாவது, உயிரினச் சிருஷ்டிகளிலெல்லாம் மனிதராகப் பிறப்பெடுத்தவன் சிரேஷ்டமானவன் ('அஷ்ரபுல் மக்லூக்காத்') என்பதைப்போல், ஈமான் கொண்டு முஸ்லிமாக இருப்பவன் மற்றெல்லா தேச—மத மனித இனத்தாரினும் மிகச் சிரேஷ்டமானவனே யாவன்.

முஸ்லிமானவன், தெய்வத்தை நம்புவதில் மகா உறுதி உடையவன்; மேலும் அவன், பரிசுத்த வேதவசனமாகிய திருக்குர்ஆனை, அந்த ஏக தெய்வத்தின் திருவசனக் கட்டளை என்று உறுதி கொண்டு வாழ்பவன்; மேலும் மனுஷ்ய சமுதாய மனத்துக்கும் ஈடு இணையில்லா சன்மார்க்கப் போதகராகிய மகான் முஹம்மத் நபி ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களை, அல்லாஹ்வுடைய திருத்தூதர் என்று நம்பி உயிர் வாழ்பவன்.

அப்படிப்பட்ட முஸ்லிமுடைய முதற் பெருங் கடமை யாதெனில்: இஸ்லாத்தின் இணையில்லா ஏக தெய்வக் கொள்கையின்

தத்துவங்களை உணர்ந்து, உறுதியான ஈமான் என்னும் நம்பிக்கை கொள்வதும், அதன்படி நல்அனுஷ்டானம் புரிவதும், தன்னுடைய கோட்பாடுகளில் ஏதேனும் தவறோ பலஹீனமோ இருந்தால் அதைத் தவிர்த்து, சீர்திருத்த மனப்பான்மை பெற்று உண்மையான முஸ்லிமாகத் திகழ்வதுமாகும்.

ஒருவன் தன்னை 'முஸ்லிம்' என்று சொல்லிக் கொள்வதற்கு யோக்யதாம்சம் என்ன? அந்த அம்சம் அவனுடைய உடையிலிருத்தல்ல, நடையிலிருத்தல்ல, ஆனல் அவனுடைய ஹிருதயம் என்னும் உள்ளத்திலிருந்து உறுதி பெற்று உதித்தெழுகின்றது. அந்த விருக்ஷத்தின் ஆணிவேர் "லாஇலாஹ இல்லல்லாஹ், முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என்பதாகும்.

இதை நாம் பரிசுத்தமான வசனம் (கலிமா தையிபா) என்று சொல்லுகிறோம். இதுதான் முஸ்லிமுடைய ஈமானுக்கு அடிப்படையான அம்சமாகும். ஒருவன், வெறுமனே வாயினல் மட்டும் 'லாஇலாஹ இல்லல்லாஹ், முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என்று கூறி விடுவதனல் அவன் முஸ்லிமாகிவிடமாட்டான். ஆனல் அதன் பொருளையும், உட்கருத்தையும் நம்பி, மனத்தில் இறுத்தி, அதன்படி ஆயுள் முழுதும் நடந்து கொள்ளும் பிரதிக்ஞை செய்து வாழ்வதால் மட்டுமே உண்மை முஸ்லிம் ஆகின்றான்.

இந்தக் 'கலிமா தையிபா' வின் பொருளென்ன, உட்கருத்தென்ன, தத்துவார்த்த மென்ன? இதை ஒவ்வொரு முஸ்லிமும் உயர்ந்துணர்ந்து தெரிந்து கொள்ள வேண்டும்.

(1) வணக்கத்துக் குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை;

(2) முஹம்மத் நபி (ஸல்) அந்த அல்லாஹ்வின் திருத்தூதராக இருக்கின்றார்.

இதுதான் அந்தக் கலிமாவின் வெளிப்படையான சர்வ சாதாரணமான அர்த்தம். பள்ளிக்கூடத்து முஸ்லிம் பிள்ளைகட்கு, உஸ்தாதுமார்கள் இந்தப் பொருளைத்தான் சொல்லிக் கொடுக்கிறார்கள். பிள்ளைகளும் அதை எளிதில் பாடம் பண்ணிக் கொண்டு ஒப்புவிக்கிறார்கள்.

இப்படிப் பொருள் சொல்லிவிடுவது நஞ்சமூக சம்பிரதாயங்களில் ஒன்றாகும். "வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர

187065

யாருமில்லை'' என்று சொல்லுவதின் உட்கருத்தென்ன? தத்துவ மென்ன? நோக்கமென்ன? இலக்ஷிய மென்ன? இதை உணர்ந்து ஒழுகிக்கொள்ள வேண்டியது, விஷய முணரும் ஆற்றல் பெற்ற ஒவ்வொரு முஸ்லிமுடையவும் அறக்கடமை யாகும்.

''லாஇலாஹ-இல்லல்லாஹ்'' வில் இரண்டு அம்சங்கள் பிரதான மாய் இருக்கின்றன. ஒன்று ''இலாஹ்'' என்பது, மற்றொன்று ''அல் லாஹ்'' என்பது. 'இலாஹ்' என்பதும் 'அல்லாஹ்' என்பதும் ஒன் றன்று, வெவ்வேருனதாகும்.

'இலாஹ்' என்ருல் தெய்வம் என்பது பொதுப் பொருள். 'அல் லாஹ்' என்ருல் 'அல்லாஹ்' என்றேதான் அகப்பொருள். தெய்வம் என்ருல், மாந்தன் எதையெதைப் பேரிதென நம்பி மரியாதை செய்து வணக்கம் புரிகின்ருனே அதையெல்லாம் சொல்லலாம். எனவே, ஒரு கற்சிலையை ஈசன் என்று நம்பினல் அது அவனுக்கு 'இலாஹ்' என் னும் தெய்வமாய்விடுகிறது. இவ்வாறே ஒருவன், சூரியனையோ, பசுவையோ, பருந்தையோ, குரங்கையோ, யானையையோ பகவான் என்ருே, சுவாமி என்ருே, அவதார மென்ருே நம்பி, கை கூப்பி நமஸ்கரித்து வணங்கினல் அது அவனுக்குத் தெய்வம் என்னும் 'இலாஹ்' ஆகிவிடுகிறது.

ஆனல், 'அல்லாஹ்' என்பதற்குரிய இலக்ஷணம் தனிப்பட்ட தாகும்; மகாச் சிறப்புடையதாகும். 'அல்லாஹ்' என்பதற்குச் சிலர், 'இறைவன்' என்றும், 'ஆண்டவன்' என்றும், 'கடவுள்' என்றும், 'நாயன்' என்றும் பலப்பலவாறு பொருள் கூறுகின்றனர். 'அல்லாஹ்' என்பதற்கு இஃதெல்லாம் சரியான பொருளுள்ள சொல்லாக மாட் டாது. ஆகையால் 'அல்லாஹ்' வுக்கு 'அல்லாஹ்' என்றேதான் சொல்லி, தத்துவார்த்தம் கொள்ள வேண்டும்.

உலக மக்களின் மதாசார சம்பிரதாயங்களில் தெய்வங்கள் பலப் பல உண்டு. அல்லாஹ் என்பது ஒன்றே ஒன்றுதான் உண்டு. முஸ்லிம் களால் வணங்கப்படும் இணையில்லா ஏக தெய்வத்துக்குரிய சிறப்புப் பெயரே 'அல்லாஹ்' என்பதாகும்.

'வணங்குபவன்' என்ருெரு பதம் வரும்போது 'வணங்கப்படு பவன்' என்ருெரு சம்பந்தப் பதம் தொக்கி நிற்கிறது. ஒருமனிதன் வணங்குகிருன் என்ருல், அவன் தன்னிலும் மேலான ஒரு பரம்

பொருளையே வணங்குகிறுன் என்று அர்த்தமாகிறது. ஒரு மனிதன் இன்னெரு மனிதனுக்குப் புரியும் 'மரியாதை' வணக்கமாக மாட்டாது. (இக்காலை ஒருவனைப் பார்த்து இன்னெருவன் 'வணக்கம்' என்று கூறுவது தவறுன வழக்கமாகும், இது தகாத முறையுமாகும்.)

எனவே, யாரை வணங்க வேண்டும்? தன்னினும் சிறந்த பரம் பொருளை, தன்னை சிருஷ்டித்த மகா சக்தியை, பிறப்பு-இறப்பு என்னுங் குறைகளில்லாத பரிபூரணம்சத்தை, ஆதி-அந்தம்-அழிவு சிதைவு என்னும் பங்கபேத மாறுத லில்லாத மூலாம்சத்தையே வணங்கித் தொழுதல் வேண்டும். இப்படிப்பட்ட பரம்பொருள் ஏகம் என்னும் ஒன்றே ஒன்றுகத்தான் இருக்கவேண்டும். ஈடு இணையில்லாத ஏக தெய்வம் என்று அதையே சொல்ல வேண்டும். அதைத் தான் முஸ்லிம்களாகிய நாம் "அல்லாஹ்" என்று கூறுகின்றேம். மேற்கூறிய சிறப்பான அம்சங்கள் பொருந்திய பரம் பொருள் நம் அல்லாஹு தஆலா ஒன்றே ஒன்றுதான்; ஒருவனேதான்.

வணக்கத்துக்குரிய (ஏக) தெய்வம் அல்லாஹு தஆலாதான்; வேறு எந்தப்பெயருள்ள தெய்வத்துக்கும் முஸ்லிம்கள் மரியாதையோ, வணக்கமோ, அஞ்சலியோ, நமஸ்காரமோ, ஸ்துதியோ செலுத்துவதில்லை. ஏனெனின், 'அல்லாஹ்' அல்லாத மற்ற தெய்வங்களெல்லாம் கற்பனைக்குள் அடங்கியவை; சிலை என்னும் உருவத்துக்குள் கட்டுப்பட்டவை.

இணையிலாத ஏக தெய்வமாகிய அல்லாஹ்வுக்கு உருவமில்லை, கட்டுப்பாடு இல்லை; குறையில்லை; பேதமில்லை; மாறுதலில்லை; வளர்ச்சியோ அழிவோ கிடையாது; ஊணே உறக்கமோ இறக்கமோ கிடையாது; எதனிடமும் அல்லாஹ்வுக்கு எத்தகைய தேவையும் கிடையாது. பொதுப்படையாக 'அல்லாஹ்' நம் மனித மூளைகளின், அறிவுகளின், உணர்ச்சிகளின் கற்பனைகளுக் கெல்லாம் அப்பாற்பட்டவன்.

மேலும் நாம் 'அல்லாஹ்' வை 'அவன்' என்று கூறுவதும் ஒரு வகையில் சரியற்றதே யாகும். 'அவள்' என்றே 'அது' என்றே நாம் அல்லாஹு தஆலாவைப் பற்றிக் கூறுவதில்லை. அங்ஙனமே 'அவன்' என்பதும் பொருந்தாது. அல்லாஹ்-ஆணுமில்லை, பெண்ணுமில்லை, ஜடப் பொருளுமில்லை, அஃறிணையுமில்லை என்பதே நம் முஸ்லிம்களுடைய ஈமான் என்னும் நம்பிக்கையாகும். அங்ஙனமிருந்தும் நாம் இஸ்லாமிய சம்பிரதாயப்படி அல்லாஹ்வை 'அவன்'

என்றே கூறுகின்றோம். இப்படிக் கூறுவதால், அல்லாஹ்வை 'ஆணாக' ஏற்றுக் கொண்டோம் என்று பொருளல்ல. 'அவன்' என்பதைவிட சிறந்த பொருட் செறிவு உள்ள ஒரு பதம் தமிழில் இல்லையாதலால் சிறப்பான பதமாகிய 'அவன்' என்பதைக் கொண்டு 'அல்லாஹ்' வைப் பிரஸ்தாபிக்கின்றோம்.

முஸ்லிம்களுடைய ஜீவிய லக்ஷியம் மூன்று அம்சங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். (1) வணக்கம், (2) வணங்குபவன், (3) வணங்கப் படுபவன்-என்பவை அவை. இந்த மூன்று அம்சங்களுக்கும் ஒன்றுக் கொன்று நெருங்கிய சம்பந்தம் உண்டு.

முஸ்லிம்களாகிய நாம், வணக்கம் புரிவதை ஐங்காலக் கடமையாகக் கொண்டிருக்கின்றோம். தினமும் ஐந்து வேளைத் தொழுகைகளை நிறைவேற்ற வேண்டியது முஸ்லிம்கள் மீது கட்டாயக் கடமையாகும். தொழுகையின் மூலம் தன் ஆத்மக் கடமையை நிறைவேற்றாதவன் உண்மை முஸ்லிமாக மாட்டான். மனித உடல் வளர்ச்சிக்கும் தேர்ச்சிக்கும் ஆகாரம் என்னும் உணவு அவசியமாக இருப்பதுபோல், ஆத்ம வளர்ச்சிக்கும் ஞானத் தேர்ச்சிக்கும் வணக்கம் என்னும் 'இபாதத்' அத்தியாவசியமாகும்.

'இபாதத்' என்னும் வணக்கம் யாரால் புரியப் படுகிறது, யாருககாகப் புரியப் படுகிறது என்பது அந்த 'இபாதத்' என்ற சொல்லிலிருந்தே ஒலிக்கிறது. அதாவது 'ஆபித்' என்பது வணங்குபவனாகிய முஸ்லிமைக் குறிக்கிறது. 'மஃபூத்' என்பது முஸ்லிம்களால் வணங்கப் படுபவனாகிய அல்லாஹ்வைக் குறிக்கிறது.

எனவே, 'ஆபித்' என்னும் முஸ்லிம்களாகிய நம்முடைய 'இபாதத்' என்னும் வணக்கத்துக்குரிய 'மஃபூத்' ஆகிய அல்லாஹ் இணையில்லாத ஏக தெய்வமே யாவன். இங்கு 'வணக்கம்' வேறு, 'அடியான்' வேறு, 'இறைவன்' வேறு என்று நியதிமுறை வெவ்வேறாகவே இருக்கின்றது. ஒரு சாரார் இம்மூன்று பதங்களையும் போட்டு ஒன்றுடனொன்றைப் பிணைத்துக் குழப்புகின்றனர். இபாதத்-ஆபித்-மஃபூத் என்னும் இம்மூன்று பதங்களும் ஒரே 'மஸ்தர்' என்னும் தாதுவிலிருந்து பிறந்தனவாய் இருப்பதைப் போல், ஆபிதும், மஃபூதும், இபாதத்தும் ஒரே மூலாம்சம்தான் என்கின்றனர். இது பகுத்தறிவுக்கு ஒவ்வாத விஷயம்; மூளையைக் குழப்பி, நல்லறிவைக் கெடுக்கும் நாசகாரியமாகும்.

'மனிதன் தெய்வ அம்சம் உடையவன்' என்பது ஹிந்துக்களுடைய தவறான கொள்கை. 'தெய்வமே மனிதனாக உருவெடுத்துள்ளான்' என்பதும் ஹிந்துக்களின் ஒரு சாராரின் கொள்கை. 'பர மண்டலத்தின் பிதாவே, பரிசுத்த ஆவியாகி, மேரி மூலம் தேவ குமாரனாகப் பிறந்தார்' என்பது கிறிஸ்துவர்களுடைய 'திரியோகத்துவ' ச் சொல்லாகும். 'ஜெகமனைத்தும் ஈசன் அம்சம்; அவனன்றி வேறில்லை; எல்லாம் அவனே; கல்லிலும் அவன் உள்ளான், மண்ணிலும் அவன் உள்ளான்' என்பது இன்னொரு சாராரின் வீணான விதண்டாவாதம்.

நமது பரிசுத்த தீனுல் இஸ்லாத்தின் 'தவ்ஹீத்' என்னும் ஏக தெய்வக் கொள்கை மிகவும் பரிசுத்தமானதாகும்; அறிவுக்கும் அனுஷ்டானத்துக்கும் அனுபவத்துக்கும் மிகவும் பொருந்திய புனித வாதமாகும். "லாஇலாஹ இல்லல்லாஹ்" (வணக்கத்திற்குத் தகுதியான இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த தெய்வமும் வேறெந்தப் பொருளும் கிடையாது) என்ற நமது மூல மந்திரத் திருக் கலிமாவின் முதல் வசனம் இதைத்தான் எடுத்தியம்புகிறது.

அடுத்த பகுதியாகிய "முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" என்பதும் 'மஃபூத்' வேறு 'ஆபித்' வேறு-அதாவது ஆண்டவன் வேறு அடியான் வேறு என்பதை ஸ்பஷ்டமாய் விளக்கிக் கொண்டிருக்கிறது. "முஹம்மத் (நபி-ஸல் அவர்கள்) அந்த ஏக தெய்வமாகிய அல்லாஹ்வுடைய திருத்தூதர் என்னும் போதகாசிரியராவார்" என்பது அதன் கருத்து. இங்கும் வணங்கப்படும் அல்லாஹ் வேறு, வணங்குகிற முஹம்மத் வேறுதான். அதாவது, முஹம்மதும் அல்லாஹ்வை வணங்க வேண்டிய அடியாரே யாவர் என்பது தத்துவார்த்தம்.

முஸ்லிம் சகோதரீர்! இஸ்லாத்தின் 'தவ்ஹீ' தாகிய இணையில்லா ஏக தெய்வக் கொள்கையை ஆழ்ந்து சிந்தியுங்கள். அல்லாஹ்வுக்கே தனி வணக்கம் புரிந்து இகத்திலும் பரத்திலும் ஈடேற்றம் பெற்றுய்யுங்கள். வஸ்ஸலாம்!!

# தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள்

(ரஷ்மத் பாகவி)

## தொழுகையினுள் ஆகுமான செயல், ஆகாத செயல் பற்றிய ஹதீதுகள்

*தொழுதுக் கொள்பவர் வீட்டுக்குள் தொழுதுக் கொண்டிருக்கும்போது, யாரேனும் அதையறியாமல் வந்து, குரல் கொடுத்துக் கூப்பிட்டால்-அப்படி உள்ளே தொழுதுக் கொள்பவர் ஆணாக யிருந்தால், 'ஸுப்ஹானல்லாஹ்' என்று சொல்லி, அல்லது பெண்ணாக இருந்தால் கையினால் தட்டி (நிலைமையை) அறிவித்து விடுவது ஜாயிஸ் ஆகும்.

‡தொழுகையின் போது ஸஜ்தா செய்கிற ஸ்தலத்தில் பொடிக் கல் முதலியன ஏதேனும் கிடந்து, அதனால் ஸஜ்தாவில் உபத்திரவம் ஏற்படும் என்றிருந்தால், அதை ஒரு முறை (கையசைத்து) அப்புறப்படுத்தி விடுவது ஜாயிஸ் ஆகும்; அது கஷ்டம் தராததா யிருந்தால் கூடாது; (ஜாயிஸ் ஆகாது.)

†பர்லான தொழுகையில் அப்பக்கமும் இப்பக்கமும் (திரும்பிப்) பார்ப்பது கூடாது; ஆனால் அது நபில் தொழுகையாக யிருந்தால் அவசியத்தை முன்னிட்டு எப்போதேனும் ஒரு விடுத்தம் பார்த்து விட்டால் அதனாலொன்றும் குற்றமில்லை.

↑தொழுகையின் போது கொட்டாவி வந்தால் இயன்ற மட்டிலும் வாயைத் திறக்காதிருக்க முயலவேண்டும். எவ்வகையிலாயினும் அந்தக் கோட்டாவியை தடுத்துவிட முயலவேண்டும்; அப்போது "ஹா..." என்று சப்தம் கிளப்புவது கூடாது; ஏனெனின் தொழுகையின்போது வாய்திறந்து கொட்டாவி விட்டால், ஷைத்தான் வாய்க்குள் புகுந்து சிரிக்கின்றான்.

‖தொழுகையின் போது கொட்டாவி வந்தால், வாய் மீது கை வைத்துக் கொட்டாவியை அடக்குவது ஜாயிஸ் ஆகும்.

×மேலும் தொழுகையில் தும்மல் வந்தால் "அல்ஹம்து லில்லாஹி ஹம்தன் கதீரன் தய்யிபன் முபாரகன் பீஹி, முபாரகன்

---

*ஸஹீஹைன், மிஷ்காத்
‡ஸஹீஹைன், மிஷ்காத்
†திர்மிதி, மிஷ்காத்
↑ஸஹீஹைன், மிஷ்காத்
‖இப்னு மாஜா, மிஷ்காத்
× திர்மிதீ, அபூதாவூத், நஸாயீ, மிஷ்காத்

அலீஹி கமா யுஹிப்பு ரப்பனா வயர்லா" என்று ஒருவன் ஓதுவானானால், அதனாலொன்றும் பாதகமில்லை. இதனால் தொழுகையில் குறைவு ஏதும் ஏற்படாது. நன்மையே (தவாபே) கிடைக்கும்; ஆனால் மெதுவாக ஓதிக்கொள்ளவும்.

*தும்முகிறவர் இந்த துஆவை ஓதி, அதைக்கேட்கிற தொழுகையாளி 'யர்ஹமு கல்லாஹ்' என்று (ஜவாபு) சொல்வது கூடாது; விலக்கப்பட்டுள்ளது.

÷நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஒரு முறை மஸ்ஜிதில் ஸஹாபாக்களுக்கு தொழ வைத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஜைனபுடைய பெண் குழந்தை அமாமா, நாயகம் (ஸல்) அவர்கள் தோள்மீது உட்கார்ந்து கொண்டிருந்தது. நாயகம் (ஸல்) அவர்கள் ருகூவுக்குப்போகும் போது, குழந்தையை எடுத்துத் தரையில் உட்காரவைத்து விடுவார்கள். பிறகு ஸஜ்தாவிலிருந்து எழுந்து நின்றதும் குழந்தையைத் தூக்கி தோள் மீது உட்காரவைத்துக் கொள்வார்கள். (ஹதீது)

‡நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமாயிருப்பதாவது:—தொழுகையின் நிலைமையிலும், பாம்பு தேள்களைக் (கண்டால்) கொன்று போட்டு விடுங்கள்.

†தொழுகையின் போது, ஸஜ்தா செய்யுமிடத்தை ஊதுவது விலக்கப்பட்ட காரியமாகும்.

↑தொழுகையில் துஆ கேட்கும் போது வானத்தின் பக்கம் தலை உயர்த்திப் பார்ப்பது விலக்கப்பட்ட காரியமாகும்.

‖நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமாயிருப்பதாவது:—ஆண்டவன் எப்போதும் தன் அடியானின் பக்கமே பார்த்துக் கொண்டிருக்கிறான். எனவே அடியான், தன் பர்லுத்தொழுகையில் இங்கும் மங்கும் திரும்பிப்பார்க்கத் தொடங்கினால், ஆண்டவனும் அவனிடமிருந்து தன் முகத்தை திருப்பிக் கொண்டு விடுகிறான்.

---

*மிஷ்காத்
÷மஜாஹிரே ஹக்
‡மஸ்னத் இமாம் அஹ்மத், திர்மிதி, ஸனயி, மிஷ்காத்
†திர்மிதி, மிஷ்காத்
↑திர்மிதி, மிஷ்காத்
‖மஸனத், இமாம் அஹ்மத், அபூதாவூத், மிஷ்காத்

×ஜாபிர் என்ற ஸஹாபி, நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடன் ளுஹருடைய தொழுகையை தொழுதுக் கொண்டிருந் தார். அப்போது வெய்யிலினால் பூமியின் மணல் அதிக சூடா யிருந்த தால், மணலை கையில் எடுத்து அதை ஆறவைத்து ஸஜ்தா செய்யும் ஸ்தலத்தில் போட்டு அதன் மீது ஸஜ்தா செய்பவராக இருந்தார்.

*தொழுதுக் கொண்டிருப்பவர்க்கு யாரேனும் 'ஸலாமுன் அலைக்க' என்று சொல்லி ஸலாம் செய்தால், அதற்கு(ப் பகரமாக) விரித்த கை கொண்டு பூமியின் பால் சமிக்ஞை செய்து விட்டால் போதும். ஸலாமுக்கு ஜவாபை வாயினால் சொல்ல வேண்டிய அவசிய மில்லை; அது கூடாத காரியமாகும். ஏனெனின், அதுவும் ஒரு வகை யான ஷுகல் (செயற்கைச் செயல்) தான். 'ஷுகல்' செய்வது தொழுகையில் ஆகாத கருமம்.

÷தொழுதுக் கொள்பவர் தம்முடைய பார்வையை ஸஜ்தா செய்யக்கூடிய இடத்திலேயே பதியச் செய்யவேண்டும்.

‡யாருக்கேனும் சிறு நீர் பெய்ய வேண்டிய அவசியம் அல்லது மலம் கழிய வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தால், முதலில் அந்த அவசி யங்களை (ஹாஜத்துகளை) நிறைவேற்றிக் கொண்ட பிறகே, தொழுகச் செல்லவேண்டும்; இன்றேல் (நல்ல விதமாக) தொழுகை நிறைவேற மாட்டாது.

†தொழுதுக் கொண்டிருக்கும் போது 'காற்று பரிந்துவிட்டால் தொழுகை நிய்யத்தை முறித்துவிட்டு, (புது) ஒழுவு செய்ய(ப் போக) வேண்டும். பிறகு தொழுகையை புதுப்பித்து நிறைவேற்ற வேண்டும்.

↑தொழுதுக் கொண்டிருக்கும் நிலைமையில் தன்னுடைய கால் உறை அல்லது பாதரக்ஷை அசுத்தம் பட்டதா யிருக்கிறதென்ற விஷயம் தெரிய வந்தால், தொழுகையின் நிலையிலேயே அதை கழற்றி எறிந்து விடலாம்.

‖நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது:—நீங்கள் யூதர்களுக்கு எதிரிடையாக (அமல்)ச் செய் யுங்கள். அவர்கள் பாதரக்ஷையுடனும் காலுறையுடனும் தொழுகை (வணக்கம்) புரியமாட்டார்கள்; ஆயினும் நீங்கள் புரியுங்கள்.

---

× அபூதாவூத், நஸாயீ, மிஷ்காத்
*ஸஹீஹைன், மிஷ்காத்
÷பைஹகீ, மிஷ்காத்
‡புலூகுல் மராம்
†அபூதாவூத், மிஷ்காத்
↑அபூதாவூத், தாரமி, மிஷ்காத்
‖ அபூதாவூத், மிஷ்காத்

×எவரேனும் பாஜாவை (இஜாரை) அல்லது கீழ் வஸ்திரத்தை (லுங்கியை) கடுங்காலுடன் தொங்கப்போட்டுக் கொண்டு தொழுதால், அவரது அத்தொழுகை நிறைவேற மாட்டாது.

*அல்லாஹ்வினிடம் அதிக அச்சம் கொண்டு தொழுகையில் யாரேனும் அழுதால், அதனுல் தொழுகைக்கு எத்தகைய குறைபாடும் ஏற்பட மாட்டாது.

÷கபில் தொழுகையை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் போது, எதிர்ப் புறத்திலுள்ள ஜன்னல் (கதவு)களைத் திறந்து வைத்துக் கொள்வது ஜாயிஸ் ஆகும். (தொடரும்)

---

× மஜாஹிரே ஹக்
*மஸ்னத் இமாம் அஹ்மத், மிஷ்காத்
÷மஸ்னத் இமாம் அஹ்மத், திர்மிதி, நஸாயீ, மிஷ்காத்


# முதல்லல் கோஷா நாமா

(புதிய பதிப்பு)

கோஷா பர்தா விஷயத்தைப் பற்றி ஹக் தஆலாவின் கலாமாகிய தலீல்களிலும் நமது நபி நாயகமவர்களின் திரு மொழியாகிய ஹதீதுகளிலும் வந்திருப்பவைகளைக் கல்விக் கடல்களாகிய முஹத்திஸீன்களும், முபஸ்ஸிரீன்களும், முஜ்தஹிதீன்களும் தெண்டித்து விபரித்தெழுதி யிருப்பவைகளில் சிலதை சுருக்கமாக சேகரித் தெழுதி முதல்லல் கோஷா நாமா வென்று பெயர் வைத்து தற்கால ஆலிம் மவ்லவிகளில் மஹான்களாகிய பத்து உலமாக்கள் பார்வையிட்டு அச்சிடப் பட்டது. இவைகளெல்லாம் வசனமாகக் கூறப்பட்டு இருக்கின்றன.

பின்பு இவைகளெல்லாம் சுலபமாக மனதில் வைத்துக் கொள்ளும் பொருட்டு பாடல்களாக போடப்பட்டு இருக்கின்றன.

இதன் விலை ந. பை. 52

ஷை அறபுத் தமிழ் விலை ந. பை. 80

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ், 5.

# மண வாழ்க்கை

(மாஸ்டர் கமால் பாபு)

## அன் நிகாஹு மின் ஸுன்னதி பமன்
## ரகிப அன் ஸுன்னதி பலைஸ மின்னி

"நிகாஹ் செய்வது என் ஸுன்னத்து. அதை நிராகரித்தவன் என்னைச் சேர்ந்தவனல்ல." பிரபலமான இந்த ஹதீதை யாரும் மறுக்க வில்லை. மறுக்கவும் முடியாது. இந்த ஹதீதை முன்னிட்டு எல்லா முஸ்லிம்களும் தம்தம் இஷ்டப்படி மணம் புரிந்து கொண்டு தான் வருகிறார்கள். ஆனால், கல்யாண விஷயத்தில் எப்படி காருண்ய நபியைப் பின்பற்றுகிறார்களோ அதே போல் மண வாழ்க்கையிலும் முஹம்மது நபி அவர்களைப் பின் பற்றாமல் பெண்களை வெறும் விளை யாட்டு கருவியாகவும் தன் காமத்தைத் தீர்க்கும் உணர்ச்சி யற்ற மரக் கட்டையாகவும் கருதி வருகிறார்கள் பெரும்பாலான முஸ்லிம்கள்.

பெண்களுக்கு சம உரிமை அளித்து பெருமை தந்தது இஸ் லாம். அந்த இஸ்லாமில் பிறந்த ஆண்கள் தங்கள் மனைவிமார்களை உணர்ச்சி யற்ற மரக்கட்டைகளாக நினைத்து மனைவிகளின் மனதை கோகச் செய்வது வேடிக்கையான விஷயம் மட்டு மல்ல, விபரீதமான காரியமும் கூட.

'ஸூரே நிஸா' வில், 'பெண்ஜாதிகளோடு நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்' என்று நாயன் கூறுகிறான். இதையே பின் னணியாகக் கொண்டு "எவன் பெண்ஜாதி இடத்தில் அழகிய முறை யில் அன்பாக இருக்கிறானோ அவனே உங்களில் மேன்மையானவன்" என்று நீதியை போதிக்க வந்த நாயகம் அவர்கள் நவின்றதை திர்மதி, இப்னே மாஜா, மிஷ்காத் போன்ற கிரந்தங்கள் கூறுகின்றன.

நபி நாயகம் கூறுகிறார்கள், "ஏ ஜனங்களே! பெண்கள் விஷ யத்தில் என் வஸீயத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். அதாவது: தன் மனைவிகளிடத்தில் அன்பாகவும் ஆசையாகவும் இருங்கள். ஏனெ னில் பெண்கள் விலா எலும்பில் இருந்து படைக்கப்பட்டவர்கள், அவர்களைச் சீர்திருத்த வேண்டு மென்று உங்கள் சக்தியை உபயோகித் தால் விலா எலும்பு போல் உடைந்து விடும். எனவே, நீங்கள் இன்பம் காண வேண்டு மானல் அப்படியே விட்டு விட்டு (அதிக சக்தியை உபயோகிக்காமல்) இன்பம் காணலாம். (ஸஹீ மிஷ்காத்)

மண வாழ்க்கையில் உள்ள இன்பம் உலகில் வேறு எந்த பொருளிலும் இல்லை என்பது பாச நபி அவர்களின் பொய்யா மொழி. இதன் காரணமாகவே, பெண்ஜாதி பிள்ளைகளுக்கு முறையான செலவை மேற் கொள்ளுவது, அடிமையை வாங்கி விடுதலை செய்வதை விடவும் 'பீஸபீல்' க்கு பணம் கொடுப்பதை விடவும் மேலானது என்று பரிசுத்த இஸ்லாம் பகர்கின்றது. இதுவும் தவிர, 'எவன் ஒருவன் தன் பெண்ஜாதி பிள்ளைகளை வெறுத்துச் சென்றானோ அவனுடைய தொழுகை நோன்பு எதுவும் ஆண்டவனிடம் கபூல் ஆகுவதில்லை' என எம்பெருமானார் எச்சரித்து உள்ளார்கள். இதனால் மண வாழ்க்கையில் மனைவியை விட்டு விடாமல் கட்டி காக்கும் அவசியம் தெரிகிற தல்லவா?

விருந்தாளிகள் யாரும் இல்லாவிட்டால் மனைவியுடன் சாப்பிட வேண்டும். ஏனெனில் மனைவி மக்களுடன் சேர்ந்து சாப்பிடுகிறவர்கள் மீது ஆண்டவனும் அவனுடைய 'மலாயிக்' களும் நல்மாராயம் கூறுவதாக ஒரு ஹதீதில் வந்து இருக்கிறது.

உலகின் கண் உத்தம நபி அவர்கள் உரைக்கிறார்:— "எந்த முஸ்லிமும் தன் பெண்ஜாதி மீது வெறுப்புக் கொள்ளக் கூடாது ஏனெனில் அவளுடைய ஒரு கெட்ட காரியம் வெறுப்பைத் தந்தாலும் மற்றொரு நல் காரியம் மகிழ்ச்சியை தரும்" (முஸ்லிம்-மிஷ்காத்)

பெண்ஜாதி இடம் குடிகொண்டிருக்கும் கெட்ட பழக்கத்தை எக்காரணம் கொண்டும் வெளியில் சொல்லக் கூடாது. ஆண்டவனின் அநேக 'ஸிப்து' களில் 'ஸத்தாருல் உஃயூப்' (குற்றங்களை மறைப்பவன்) என்பதும் ஒன்று. ஆண்டவனின் ஸிபத்துகளை கையாள வேண்டிய முஸ்லிம்கள் எவருடைய குற்றத்தையும் பிரபல படுத்தாமல் மறைத்து மூட வேண்டியது மிக மிக அவசியம். எவன் ஒருவன் உலகில் பிறருடைய குற்றங்களை மறைக்கிறானோ அவனுடைய குற்றங்களை ஆண்டவன் 'கியாமத்' நாளில் மறைப்பான் என்றும் ஒரு ஹதீது இருக்கிறது. எனவே, பிறர் குற்றங்கள் மட்டுமல்லாமல் பெண்ஜாதியின் குற்றத்தையும் மறைக்க வேண்டியது அவசியம்.

"ஹஜ்றத் ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் இல்லாமலிருந்தால் எந்த பெண்ஜாதியும் தன் புருஷனுக்கு துரோகம் செய்ய மாட்டாள்" என்று நபி நாயகம் கூறியதாக சஹீ மிஷ்காத் பக்கம் 272-ல், குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனால் என்ன தெரிகிறது, பெண் புத்தி பின் புத்தி என்பதற்கேற்ப, பெண்ஜாதி தன் புருஷனுக்குப் பலவித தொல்லைகளைத் தரவும் நேரலாம். இருந்தாலும் அதற்காக புருஷன் ஆத்திரம் கொள்ளக்கூடாது. இதற்காகவே பெண்ஜாதியின் ஒரு கெட்ட பழக்கம் ஆத்திரத்தை மூட்டினாலும் இன்னொரு நற்காரியம்

ஆறுதலையும் ஆனந்தத்தையும் கொடுக்கும் என்ற ஹதீதை மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் "பெண்ஜாதியின் வசைமாறிகளை யும் வம்புத்தனத்தையும் எவன் பொறுமையுடன் பொறுத்துக் கொள் கிருனே அவனுக்கு, அய்யூப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நோயின் போது கையாண்ட பொறுமையின் நன்மையை ஆண்டவன் தந்தருள் வான்" என்று நேர்மையான நபி நல்மாராயம் நவின்றுள்ளார்கள்.

அனுமதிக்கப்பட்ட விஷயங்களில் ஆண்டவன் வெறுக்கக் கூடி யது 'தலாக்' ஒன்றே. ஏனென்ருல் தலாக் என்பது ஒன்றுபட்டிருந்த உள்ளங்களைத் துண்டிப்பதாகும். சிதறிய உள்ளங்கள் ஒருமனதாக ஒன்று சேருவதைத்தான் ஆண்டவன் நேசிக்கிருனே தவிர ஒன்று பட்ட உள்ளங்கள் பிளவு படுவதை விரும்ப வில்லை. இதனுலே முஸ் லிம்கள் ஒருவருக் கொருவர் ஒற்றுமையுடன் வேற்றுமை யின்றி வாழ வேண்டு மென்று இஸ்லாம் வலியுறுத்துகிறது. பொதுப்படையாக முஸ்லிம்களிடையே ஒற்றுமையை வலியுறுத்தும் இஸ்லாம் பெண் ஜாதி புருஷர்களிடையே நிலைக்க வேண்டிய ஒற்றுமையை எவ்வளவு வலியுறுத்தும் என்பதைச் சொல்லத் தேவை இல்லை. கணவன் மனைவி யின் ஒற்றுமையை நிலை நாட்டும் பொருட்டு, "எவன் புருஷன் பெண் ஜாதிக் கிடையில் விரோதத்தை உண்டு பண்ணுகிருனே அவன் நம் கூட்டத்தை சேர்ந்தவனல்ல" என்று சீர்திருத்த வந்த சாந்த நபி அவர்கள் சாற்றியுள்ளார்கள். (அபூதாவூத்-மிஷ்காத் பக்கம்-274)

ஆகவே, புருஷன், பெண்ஜாதியை தலாக் சொல்லாமல் இருக்க வேண்டியது அவசியத்திலும் அத்தியாவசிய மாகும். மனைவியே மணாளனின் கண்களுக்கு குளிர்ச்சியைத் தரக் கூடியவள் என்று மாநிலம் போற்றும் முஹம்மது நபி அவர்கள் மருதளித்துள்ளார். தலாக் சொல்வதால் பெண் மனம் புண் படுகிறது. ஒருவருடைய மனதைப் புண் படுத்துவது பெரிய பாபம் என பரிசுத்த இஸ்லாம் பகர்கின்றது. எனவே, தலாக் இன்ன தென்று அறியாத வண்ணம், மனைவி மணாளனின் மனமறிந்தும், புருஷன் பெண்ஜாதியின் மனதை அறிந்தும் எந்த துன்பத்திலும் எந்த கஷ்டத்திலும், தன் மனம் தளராமல், பொருமைக் காரர்களின் பேச்சையும் பொருட்படுத்தாமல் பாசத்துடனே நேசத்தையும் கலந்து வாழ்க்கை நடத்தி வந்தால் "**மண வாழ்க்கை**"யில் மட்டற்ற மகிழ்ச்சியை காணலாம் என் பதில் சிறிதும் சந்தேக மில்லை.

ஆண்டவன் நம் அனைவருக்கும், மேற்கூறப்பட்ட ஹதீது களின்படி நடக்க நல்லருள் புரிவானுக. ஆமீன்.

# இங்லீஷ் குர்ஆன்

திருக் குர்ஆனின் இங்கிலீஷ் மொழி பெயர்ப்பு; முஹம்மது மர்மடூக் பிக்தால் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது: 464 பக்கங்கள் கொண்டது.

விலை ரூ. 3

ஷை குர்ஆன் அறபியும் சேர்ந்து 2 பாகங்கள் ரூ. 15

# உர்தூ ஆஸான்

புதிய அச்சு

கூடிய சீக்கிரம் வெளிவருகிறது

தமிழ் தெரிந்தவர்கள் ஆசிரியன்றி 20 நாட்களுக்குள் உர்தூ பாஷையை பேசவும் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ள ஏதுவான புஸ்தகம் இது ஒன்றே. ஒரு உர்தூ ஆஸான் புஸ்தகத்தை வாங்கி இந்தியாவின் முக்கிய பாஷையாகிய உர்துவைக் கற்றுக் கொள்ளுங்கள்.

உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 256 பக்கங்களில் அச்சிட்டு அழகிய இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூ. 3

தற்கலை பீர் முஹம்மது ஒலியுல்லா அவர்கள்
திருவாய் மலர்ந்தருளிய

# ஞானக் கோர்வை

இதில் மேற்படி ஒலி நாயகமவர்கள் அருளிய பிஸ்மில் குறம், ஞானப்பால், ஞானப்பூட்டு, ஞானப் புகழ்ச்சி, ஞான மணிமாலை, ஞானக்குறம், ஞானரத்தின குறவஞ்சி, ஞான ஆனந்தக் களிப்பு, திரு மெஞ்ஞான சரநூல், ஞான முச்சுடர்ப் பதிகம் முதலியன அடங்கி யிருக்கின்றன.

கலிகோ பைண்டு விலை ரூ. 3–80

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# முகலாய பெண் மணிகள் சரிதை

டி. எப். ஆர். மஆலிசாஹிப் (பாகவி)

## அர்ஜுமந்துபானு பேகம் என்னும் மும்தாஜ் மஹல்

முகலாயச் சக்கரவர்த்தி, ஷஹின்ஷாஹ் ஷஹாபுத்தீன் ஷாஜஹான் அவர்களின் அருமை பெருமை மிகுந்த மனைவியே அர்ஜுமந்து பானு பேகம். இப்பெண்ணரசி மீது ஷாஹ்ஜஹான் மன்னர் அளப்பரிய ஆசையும் நேசமும் கொண்டிருந்தார். அம்மாதரசியின் பேச்சை, ஷாஜஹான் ஒருபோதும் தட்டிப் புறக்கணித்ததில்லை. எப்போதும், சதாகாலமும் அப்பெண்ணரசியின் அருகிலேயே இருந்து வரப்பிரியமுடையவராய் வாழ்ந்து வந்தார். ஒருபோதும், தன் சமுகத்தைவிட்டு, அர்ஜுமந்து பானுவை பிரித்து வைக்கவில்லை; பிரிந்து வாழவும் விரும்பவில்லை.

இதற்கு ஓர் அரிய அத்தாக்ஷி, அவர்கள் இருவரின் கப்ருகளும் ஒரே 'மக்பரா'வுக்குள் அணைந்த வண்ணம் இருக்கின்றன. இறந்த பின்னும் ஷாஹஜஹான் மன்னர், தன் அருமை மனைவியின் அருகிலேயே சதா சயனித்துக் கொண்டிருக்கிறார் எனலாம்.

### 'மும்தாஜ் மஹலி'ன் புத்தி கூர்மை.

அர்ஜுமந்து பானுவுக்கு ஷாஹஜஹான் இட்ட அருமைப்பெயர் 'மும்தாஜ்மஹல்' என்பதாகும். இறைவன் கிருபையால், அர்ஜுமந்து பானு, அமிதமான புத்திசாதுர்யமும் அறிவுவிசாலமும் பெற்றிருந்தாள். அதற்கேற்ற அழகு சௌந்தர்யமும் அதிகம் உடையவளா இருந்தாள். அந்தக் காலத்தில் அரண்மனை அந்தப்புரப் பெண்மணிகளில் அர்ஜுமந்து பானு பேகத்தைவிட, நல்லறிவுடையவள்—நற்குணமுள்ளவள்—காஸுக்கான நற்சுபாவமுள்ளவள்—அழகிற் சிறந்தவள் யாருமில்லை என்று சொல்ல வேண்டும். மிகவும் சகிப்புத்தன்மையும், சந்தர்ப்பம் பார்த்து, சூழ்நிலைக் கேற்ப நடந்துகொள்ளும் பண்பாடும் உடையவளாய் இருந்தாள், சரித்திரக்காரர்கள் அர்ஜுமந்து பானுவை அதிகம் புகழ்கின்றனர்.

### மும்தாஜின் தயாள குணம்.

அர்ஜுமந்து பானு பேகம் மிகுந்த தயாளகுண முடையவள்; எல்லோருக்கும் நன்மை செய்யவேண்டு மென்ற நற்பண்பாடு உடையவள்; மனம் அறிந்து யாருக்கும் தீங்கு செய்தறியாத உத்தம மாதரசி; கஷ்டப்படுவோரைக் கண்டு கசிந்து மனமுருகும் பேதை உள்ளம் படைத்தவள். பிறரிடம் பற்று, நன்றியுடைமை வாய்ந்தவள்.

அர்ஜுமந்து பானு, பட்டத்துப் பாதுஷாஹ்வின் பட்டமகிஷி என்னும் ராணியாக இருந்தும், உலக சுகபோகங்களில் ஆசைஇல்லாதவள். "இந்த உலகம் சதமல்ல. இதில் நாம் ஜீவித்திருக்கும் காலத்துள்ளவே, நம்மாலானவரை நல்ல காரியங்கள் செய்துவிட்டுப் போக வேண்டும்; நாம் மரித்த பின்னர், மக்கள் நம்மைப் பாராட்ட வேண்டும்; குறை கூறும்படி நாம் ஏதும் செய்துவிட்டுப் போகக்கூடாது" என்ற மனப்பான்மை யுடையவள்.

எனவே, அர்ஜுமந்து பானு, தேவைப் படுவோர். என்ன கேட்டாலும் இல்லை என்னுது கொடுத்து விடுவார். அள்ளி அள்ளி, தாராளமாக தான தர்மம் செய்வார். சிக்கனம் பாராமல், தங்கு தடையில்லாமல் திரவியங்களை தன்னை நாடிவருவோர்க்கு எடுத்துக் கொடுப்பார். எனவே, அரண்மனைவாசிகளும் சரி, வெளிப்பிரஜைகளும் சரியே அர்ஜுமந்து பானுவுக்கு தங்கள் இன்னுயிரை அர்ப்பணம் செய்யவும் பின் தங்கமாட்டார்கள்.

## பொன் நாணயங்களின் மழை.

ஷஹின்ஷாஹ் ஷஹாபுத்தீன் ஷாஹஜஹான் மன்னர் பட்டத்தில் அமர்ந்த சந்தர்ப்பத்தில், அர்ஜுமந்து பானு பேகம், ஓர் அரிய காரியம் செய்தார். ஷாஹ்ஜஹான், மன்னர் மீது பொன் நாணயங்களாலேயே மழை பெய்யவைத்தார். அதாவது கஜானுவிலிருந்து அஷ்ரபி என்னும் பொன் முஹ்ராக்களை யெல்லாம் கொண்டுவரச் செய்து, ஷாஜஹான் மன்னரை ஓர் அரியணையில் உட்காரச் செய்து அவரது தலைக்கு மேலே அந்த பொன் நாணயங்களை யெல்லாம் மழை போல் வர்ஷிக்கச் செய்தார். அதுமட்டுமில்லை. அந்தப் பொற்காசுகளை யெல்லாம் ஏழை எளியோர்களுக்கும், பிச்சைக்கார பக்கீர்களுக்கும் அள்ளி அள்ளி தானம் செய்து விட்டார். முகலாய மன்னர்களின் கஜானுக்களில் எவ்வளவு பொன் நாணயங்கள் இருந்திருக்கு மென்று சொல்லவா வேண்டும்.

## ஆக்ராவில் ஒரு பட்டமேற்பு விழா

ஹிஜ்ரீ 1038-ம் வருஷம், அதாவது ஷாஹ்ஜஹான் மன்னர், பட்டத்துக்கு வந்த இரண்டாவது ஆண்டு, ஆக்ரா நகரத்தில் பட்டமேற்பு விழாவை யொட்டி 'தர்பார்' கொண்டாடப் பட்டது. இந்த சந்தர்ப்பத்தில், மந்திரிப் பிரதானிகள், அரச அவையில் வீற்றிருப்பவர், ஆலிம் மௌலவி, அறிஞர்ப் புலவர்கள் போன்றோர்க்கு பிரத்தியேகமாக சன்மானங்கள் வழங்கப்பட்டன. இந்த சன்மான விழாவில் தன்னுடைய சார்பாக விநியோகிப்பதற் கென்று அர்ஜுமந்துபானு மும்தாஸ் பேகம், 50 லக்ஷம் ரூபாய் நாணயங்களை எடுத்துக் கொடுத்தார். அவ்வளவும் சன்மானம் செய்யப்பட்டது.

தர்யாபக்ஷ் பேகம் என்பவர், மும்தாஜ் மஹலுக்கு உதவியாக யிருக்கும் தோழி. இவளது கையினலேயே, அத்தனை ரூபாய்களும் ஏழைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. அரசி, அன்னிய எளிய ஜனங்களின்முன் போகக்கூடா தல்லவா?

## 16-லக்ஷம் ரூபாய் மாதாந்த செலவுப்பணம்

ஷாஹஜஹான் சக்ரவர்த்தியவர்கள், தன் பட்ட மகிஷி அர்ஜுமந்து பானு பேகத்துக்கு, மாதந்தோறும் கைச்செலவு பணமாக (உம்பளமாக) 16-லக்ஷம் ரூபாய் கொடுத்து வந்தார். இதல்லாமல், மற்ற அரண்மனை-அந்தப்புர ஆடம்பரச் செலவுகளெல்லாம், வழக்கம் போல் அரசாங்க பொக்கிஷத்திலிருந்து செலவு செய்யப்பட்டு வந்தது.

அர்ஜுமந்து பானுவுக்கு இவ்வளவு வருமானமும் வசதிகளும் இருந்துங்கூட, அவர் ஒன்றும் தனக்காக சேமித்து வைத்துக் கொள்ளவில்லை. அவர் மவுத்தாகும் போது, அவர் பணப்பெட்டியில் ஓர் கால் ரூபாயும் மிஞ்சி இருக்கவில்லை. தன்னுடைய ஜீவிய காலத்திலேயே, தன் கண்ணெதிரிலேயே எல்லோருக்கும் அள்ளிக் கொடுத்து, பிறர் வறுமை நீங்கி, சந்தோஷப் படுவதைக் கண்டு உவகை கொண்டார்.

## கவி பாடும் கட்டழகி மும்தாஜ்

அர்ஜுமந்து பானு பேகம், இல்மு என்னும் இஸ்லாம் மதப் படிப்பிலும், பார்சியில் 'ஷிஅர்' என்னும் கவிதைப் பாடும் தன்மை யிலும் பெயரும் புகழும் பெற்றிருந்தார். பிற புலவர்கள் பாடி, இயற்றி வைத்துள்ள கவிதைகளைப் பெற்று படித்துப் பார்த்து பரவசம் அடைவார். கவிதையைப் படித்து அனுபவித்து பாடும்போது, தன் உணர்வு இழந்து விடுவார்.

ஒருமுறை, ஷாஹ்ஜஹான் மன்னர் 'ஹரம் ஸராய்' என்னும் அந்தப்புரத்துக்குச் சென்றார். உள் அறைக் கதவு மூடப்பட் டிருந்தது. 'பேகம், பேகம்' என்று கூப்பிட்டு கதவைத் தட்டினர். பதில் இல்லை. உள்ளிருந்து கவிதைகளை அழகுற படித்துப் பாடிக் கொண்டிருக்கும் சப்தம் மட்டுமே கேட்டது. ஷாஜஹான், சும்மா மூடப்பட்டிருந்த கதவைத் திறந்து கொண்டு உள்ளேபோய், தன் ஹிருதய ராணி மும்தாஜ்மஹல் அருகில் நின்றார். அப்போதும் அவர் 'ஷிஅர்' கவிதையைப் பாடி ரசித்துக் கொண்டிருப்பதில் மூழ்கிப் போயிருந்தார்.

இங்ஙனம் சிறிது நேரம் கழிந்தது. அதன்பின், அரசி மும்தாஜ் சுய உணர்வு பெற்று, தன் அருகில் வந்து நிற்பவர், தன் ஹிருதய மன்னரான ஷஹின்ஷாஹ் என்பதை அறிந்து வெட்கப்பட்டு எழுந்து நின்று தலை குனிந்தார்.

"ஹுஜூர்! வெகு நேரமாக தாங்கள் நின்று கொண்டிருக்கிறீர்களா? நான் கவனிக்கவில்லையே. மன்னிக்க வேண்டும்" என்றார் மும்தாஜ்.

"கவிதாமணியே! நீ பாட்டில் ரசித்துப் போயிருக்கும் சுபாவத்தைப் பார்த்து, உன் முகாரவிந்தம் நோக்கி நானும் ரசித்துக் கொண்டு நின்றேன்" என்று மன்னர் பதில் கூறியதுடன், தன் கழுத்தில் அணிந்திருந்த வெண் முத்தாரத்தை கழற்றி கவிதா ராணிக்கு சன்மானம் கொடுத்து, மகிழ்வித்தார்.

## ஈரேழு மக்களைப் பெற்ற எழில் அரசி

ஷாஹஜான் மன்னருடன்-மும்தாஜ் மஹல் அர்ஜுமந்து பானு பேகம், சுமார் 21-வருஷம் தாம்பத்திய வாழ்க்கை நடத்தி இன்ப நாட்களைக் கழித்து வந்தார். அந்த நாட்களில் மொத்தம் 14 பிள்ளைகளைப் பெற்றெடுத்தார் பாக்கியவதியான அர்ஜுமந்து பானு.

இந்தப் பதினான்கு பிள்ளைகளில் ஏழு பிள்ளைகள் சிறு வயதுகளிலே இறந்துப் போய்விட்டன. எஞ்சியிருந்து வளர்ந்துப் பெரியவர்களான ஏழு பிள்ளைகளின் பெயர்கள் இந்திய முகலாய சரித்திர ஏட்டிலும் ஏறிவிட்டன. அவர்கள்: (1) தாரா ஷகூஹ், (2) ஷாஹ் இஷ்ஜாஃ (3) மிர்ஜா முராத், (4) அவுரங்கஜேப் ஆலம்கிர், (5) அன்ஜும் ஆரா பேகம், (6) கேத்தி ஆரா பேகம், (7) ஜஹான் ஆரா பேகம் என்பவர்களாவர்.

(இந்த மூன்று இளவரசிகளும், நான்கு பட்டத்து இளவரசர்களும், இந்திய சரிதையில் பெற்ற இடம் தனிப்பட எடுத்துரைக்க வேண்டியதாகும்.)

## பட்ட மகிஷியின் பரிதாப மரணம்

மும்தாஜ்மஹல் அர்ஜுமந்து பானுவின் மரணம் மிகப் பரிதாபகரமானதாகும். பூரண கர்ப்பவதியாக இருந்தாள் மும்தாஜ். இரண்டு மூன்று நாட்கள் ஜுரமும் வாட்டிற்று அரசியை. பாபம், மிகவும் பலஹீனவளாய் விட்டாள்.

இப்படிப்பட்ட சமயத்தில் பிரசவ வேதனையும் ஏற்பட்டது. காய்ச்சல் ஒருபக்கம், பிரசவ வேதனை ஒருபக்கம். இரண்டும் வாட்டின எழில் அரசியை. ராஜாங்கப் பெரும் பெரும் ஹக்கீம்கள், வைத்தியர்கள் எல்லோரும் கூடியிருந்து, பிரயாசைப் பட்டனர். யார் இருந்தும் என்ன செய்வது? காலம் முடிந்து விட்டால், காரியம் கைகூடுவதில்லையே!

தன் ஜீவியம் என்னும் விளக்குச் சுடர் மங்கி இனி அணைந்து விடப் போகிறதென்பதை, விவேகவதியான அர்ஜுமந்து பானு உணர்ந்து கொண்டாள். தன் அருமந்தக் கணவர் ஷாஹின்ஷாஹ் ஷாஹ்ஜஹானை அருகில் அமர்த்தி, உருக்கமாக கூறிய (வசியத்து) இறுதி வாக்கியங்களாவன :—

"அல்ஹம்து லில்லாஹ்! எல்லாம் வல்ல இறைவனுக்கு 'ஷுக்ரு' செய்கிறேன். அவன், என்னை காலமெல்லாம் சுக சௌக்கியத்திலும், கீர்த்திப் பிரதாபத்திலும் வைத்திருந்தான். என்னுடைய எந்த ஆசையும் பாக்கியில்லை; யாவும் அனுபவித்து விட்டேன். பொக்கிஷமும் பெற்றுக் கையாண்டேன்; மக்களையும் பெற்று வளர்த்தேன். எனினும் நான், அல்லாஹுக்குப் புரிய வேண்டிய கடமை-வணக்கங்களில் பின்னடைந்து விட்டேன். ஆகவே நான் ஒரு பாவிதான். நான் இவ்வுலகை விட்டு அவ்வாண்டவனிடம் போக வேண்டிய காலம் நெருங்கி விட்டது. நான் ஈமானுடன், கலிமா சொல்லிக் கொண்டு மவுத்தாக என் ஹக்கில் துஆ செய்யுங்கள். பிள்ளைகளை தங்களிடம் ஒப்புக் கொடுத்துச் செல்கிறேன். அவர்களை கவனித்துக் கொள்ளுங்கள். தாங்கள் என்னை மறக்க மாட்டீர்கள், பின்னரும் நாம் சேர்ந்திருப்போம்" என்பதாகும்.

இவ்வளவு கூறியதும், அருமை அர்ஜுமந்து பானு "ஹா..." என்று ஒரு கூச்சலிட்டாள். ஒரு பெண் குழந்தை பிறந்து, உலகில் ஜன்னம் எடுத்தது. தாயின் உயிர் உடலை விட்டுப் போய் விட்டது. ஒன்று பிறந்தது; மற்றொன்று மறைந்தது. அந்தோ பரிதாபம்!

## அழகு மிகுந்த 'மக்பரா' தாஜ் மஹல்

ஷாஜஹான் மன்னர், மனைவியின் பிரிவுக்குப் பலநாள் கண்ணீர் வடித்து அழுது கொண்டிருந்தார். மனைவியிடம் கொண்ட அளவிலா ஆசைக்கு அடையாளமாக, ஈடும் இணையும் இல்லாத முறையில், 50 லக்ஷம் தங்க நாணயம் செலவிட்டு 'மக்பரா' ஒன்று கட்டி முடித்தார். உலகத்தா ரெல்லோரும் அதை 'தாஜ் மஹல்' (மாளிகைக் கெல்லாம் கிரீடம்) என்று புகழ்கின்றனர்.

'மும்தாஜ் மஹல்' என்னும் பெயர், ஷாஹ் ஜஹான் மன்னர் தம் பட்டமகிஷி அர்ஜுமந்து பானுவுக்கு இட்ட செல்லப் பெயர்.

மும்தாஜ் மஹலின் மரண காலம் ஹிஜ்ரி 1040-ம் ஆண்டில் காதா மாதம் 17-ந் தேதி ஆகும். அரச தம்பதிகள் மும்தாஜ் மஹல்-ஷாஜஹான் வாழ்க்கை உலகிற்கோர் அரிய படிப்பினை ஆகும்.

திருச்சி

# ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா அவர்களின் சரித்திர சுருக்கம்

இதில் ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா அவர்கள் ஒரு அரச குமாரனாக யிருந்து தனது தந்தை காலஞ்சென்ற பின் தானே நீதிநெறியுடன் அரசு புரிந்து வரும் காலத்தில், ஓர் சொர்ப்பனங் கண்டதின் காரணமாக, சிம்மாசனத்தை விட்டு ஷய்க்கைக் தேடிச் சென்று, முரீது வாங்கியதும், பின்பு பிரயாணத்தில் தங்களுக்கு எதிராக வந்த அநேக பூதங்களை எதிர்த்து வென்றதும், பின் இலங்கைக்கு போய் ஆதம் (அலை) மலையில் ஹஸ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சந்தித்து, 'தப்லே ஆலம்' என்னும் பட்டத்தைப் பெற்ற பின் திருச்சி வந்ததும், அவர்கள் செய்த கருமத் அற்புதங்களும், அவர்களின் வபாத்தும் மிக விபரமாக விளக்கப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா. 0–52

---

புதிய மூன்ரும் பதிப்பு

# ஹஸ்ரத் நாகூர் மீரான் ஸாஹிபு ஆண்டவர்கள் காரண சரித்திரம்

இது ஹஸரத் ஸையிது அப்துல் காதிர் ஷாஹுல் ஹமீது மீரான் ஸாஹிபு ஆண்டவர்களின் ஜீவியமும், அவர்களின் அற்புதமாகிய கருமத்துகளும் ஒருங்கே நிறைந்தது. இது நேர்த்தியான காகிதத்தில் அச்சிடப்பட்டு அழகான பைண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 2–40

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஷைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# சிறைப் பறவை சிப்கத்துல்லா

## அல்லது

# துப்பு துலக்கிய தூயவர்.

## 10-வது அத்தியாயம்.

கண்கள் கனல் கக்க, சில விநாடிகள் வரை பரிதாபமாக நின்றான் காதர்கான். தனது பலத்தையும் பாரத்தையும் பிரயோகித்து கதவை திறக்க முயன்றான். கதவு அசைந்து கொடுக்கவில்லை. டெலிபோனைக் கையிலெடுத்தான். ஆனால் உடனே மனத்தை மாற்றிக் கொண்டான். விஷயம் பகிரங்கமாகி பழிக்காளாவதை அவன் விரும்பவில்லை. தான் காதர்கான் என்பதைப் பறைசாற்றிக் கொள்ளவும் அவர் விரும்பவில்லை. சமாதானமும் சமரசமுமே சாலச் சிறந்த தென்ற முடிவுக்கு வந்து கதவைத் தட்டினான்.

"மரியம்! மருண்டு விட்டாயா? வா, வெளியே, புத்திசாலித்தன மாக நடந்து கொள். நான் செய்தது, சொல்லிய தெல்லாம் தமாஷ். உன்னை சோதித்துப் பார்ப்பதே எனது நோக்கம்."

அவனது, பேச்சு கேட்டு அவள் பதில் அளிக்கவில்லை படுக்கை யறையில் டெலிபோன் இருக்கிறது போலும் என்று அவன் நினைத்தான். அவளது தந்தையை அழைத்து தெரிவித்து விடுவாளா? மற்றொரு கதவு திறக்கப்படும் ஓசை அவனுக்குக் கேட்டது. படுக்கையறையி லிருந்து நடைமுற்றத்துக்கு வழி உண்டு. அவன் அவ்வழி சென்று பார்த்த போது அங்கிருந்து அந்த தடித்த மாது வெளிப்பட்டாள். அவள் தனியே இருந்தாள். அவள் தாண்டிச் சென்றதும் கதவு தாளிடப் பெற்றது.

"நிர்வாகத்தினரிடம் உன்னைப் பற்றி நான் சொல்லி விடுவேன்" கோபாவேசத்துடன் அவள் கூறினாள். ஈவு இரக்கமின்றி அவளை அவன் கொலை செய்திருப்பான். ஆனால் அவனது ஆத்திர ஆவேசம் அந்த ஹோட்டல் சிப்பந்தியை ஒன்றும் செய்யவில்லை.

"இதற்கு முன்பு வேலை செய்திருப்பவர்களிட மெல்லாம் நான் நற்பெயர் பெற்றிருக்கிறேன். படுக்கை யறையில் இருப்பது—அது தான் எனது தொழில், என்னிடம் தகாத வார்த்தைகளைப் பேசாதீர். என்னை இழித்துப் பழித்துப் பேசத்துவங்கினீரானால் சட்டப்படி உமக்கு தண்டனை கிடைக்கச் செய்வேன்."

காதர்கான் வேகமாகச் சிந்தித்தான். அந்தப் பெண் மறையும் வரை நடை முற்றத்தில் அவன் காத்திருந்தான். பின்னர் மற்றொரு கோடியில் நின்றிருந்த பணியாளை அழைத்தான்.

"அலுவலகத்துக்குச் சென்று எனது அறைகளுக்கு மற்றொரு 'செட்' சாவி வேண்டும் என மனேஜரிடம் சொல். எனது மனைவிக்குத் தனியான ஒரு 'செட்' வேண்டுமாம்"—அவன் அமைதியாகச் சொன்னான்.

பணியாளிடம் பத்து ரூபாய் நோட்டை அளித்தான். அந்த பெருந்தொகையைக் கண்டதும் அவன் அதிசயத்து அடிமையானான்.

"நிச்சயமாக, நான் ஏற்பாடு செய்கிறேன்." என்று கூறிச் சென்றான்.

"உன்னிடமுள்ள சாவிக்கொத்தைக் கொடுத்துச் செல்கிறாயா?" காதர் வினவினான்.

"என்னிடமில்லை, எஜமான். நிர்வாகத்தினரிடம் தான் சாவிக் கொத்து இருக்கிறது. ஆனால், நீங்கள் விரும்புவதைப் போல உங்கள் அறைகளுக்கு மற்றொரு 'செட்' சாவி கொண்டு வந்து கொடுக்க முடியும் என்று நினைக்கிறேன்."

சிறிது நேரத்துக்குப் பிறகு பணியாள் திரும்பி வந்தான். ஒவ்வொரு அறைக்கும் ஒரே சாவி தான் இருப்பதாகத் தெரிவித்தான்.

அவன் அகன்றதும் அறைக் கதவை காதர்கான் தாழிட்டான். பின்னர், படுக்கை யறைக்கதவுக்குச் சமீபமாகச் சென்று குரல் கொடுத்தான்:

"மரியம்! புத்திசாலித்தனமாக நடந்து கொள்."

"நான் புத்திசாலித்தனமாக நடந்து கொள்கிறேன் என்று நினைக்கிறேன்." இந்த தடவை அவள் பதிலிறுத்தாள்.

"வெளியே வந்து என்னிடம் பேசு."

"இல்லை. நான் இங்கேயே இருந்து கொண்டிருக்க விரும்புகிறேன்."

"உனது தந்தையிடம் நீ சென்றாயாயின் உன்னைப் பின் தொடர்ந்து வந்து அவனைக் கொன்று விடுவேன். என்னிடம் நீ கூறியவற்றிற்குப் பிறகு முதலில் நான் தான் சுட வேண்டும். தெரிந்ததா?"

அமைதி நிலவியது. தனது வார்த்தைகள் அவளிடம் மாறுதலைத் தோற்றுவித்திருக்கிறது என்பதை அவன் தெரிந்து கொண்டான்.

"சிந்தித்துப் பார். சாவகாசமாக யோசித்துப்பார்."

"என்னைத் தனியே விட்டு விடுவதாக வாக்குறுதி அளிக்கிறீர்களா?"

"ஏன், எது வேண்டுமானாலும் கேட்டுப் பெற்றுக்கொள்; நீ கோரும் எந்த வாக்குறுதியும் அளிப்பதற்குத் தயார். நாள் முழுவதும் நீ அங்கேயே இருந்து கொண்டிருக்க முடியாதல்லவா? நீ சாப்பிட்டாக வேண்டும் அல்லவா?"

"அந்தப் பெண் எனக்குச் சாப்பாடு கொண்டு வருவாள்".

"சரி, நீ விரும்பிய படி செய்து கொள். ஆனால், இன்றிரவுக்குள் நீ வெளியே வராவிடில் உனது குடும்பத்தில் குழப்பம் ஏற்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்."

அவள் பதிலளிக்கா விட்டாலும், அவன் திருப்தி அடைந்தான். அன்றிரவு வரை கான் சாஹிபுடன் டெலிபோன் தொடர்பு கொள்வதற்கு அவள் முயற்சிக்க மாட்டாள் என்று எண்ணினான். அன்றிரவுக்குப் பிறகு என்ன நிகழ்ந்தால் தான் என்ன?

டெலிபோனை எடுத்தான். ஆனால் அவன் நாடிய, தேடிய ஆசாமி கிடைக்கவில்லை. கால்மணி நேரத்துக்குப் பிறகு, டெலிபோன் ஒலித்தது. கரீம் ஷரீப் பேசினான்.

ஹோட்டலில் நிகழ்ந்த சம்பவங்களை விவரித்து விட்டு, காதர் கான் சொன்னான்: "எனக்கு அவள் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறாள்."

தந்தையின் கோபத்தைக் கண்டு தனது செயல் நியாயந்தான் என நிரூபிக்க முயற்ச்சித்தான் அவன்.

"வெகு சீக்கிரமாவது அல்லது சிறிது நாட்களுக்குப் பிறகு அவளுக்கு உண்மையை உணர்த்தித்தானே ஆகவேண்டும்?"

"நீ ஒரு முட்டாள். அந்த விஷயத்தை விட்டு விட்டிருந்தாலென்ன?"

"நீங்கள் இங்கு எனக்குப் பாதுகாப்பு அளித்தாக வேண்டும். கரீமுல்லாவுக்கு டெலிபோன் செய்து விஷயத்தை அவள் வெளியிட்டு விடுவாளாயின், தொல்லை விளையும். சிப்கத்துல்லா கூட..."

"சிப்கத்துல்லாவைப் பற்றி கவலைப் படாதே. அவனிடமிருந்து எவ்வித தொல்லையும் விளையாது"

அவன் விளக்க மெதுவும் கூறவில்லை. ஆனால், தந்தையின் உறுதி மொழியைக் கேட்டு ஆறுதலும் தேறுதலும் அடைந்தான் காதர்.

"சர்வி துவாரத்தை நன்கு கவனித்துப் பார். பூட்டிலேயே சாவித் துளை இருக்கிறதா என்பதை எனக்கு எடுத்துரை. எவ்வாறாயினும், சில கருவிகளை உனக்கு அனுப்பி வைக்கிறேன். அந்தக்

கதவை அவற்றைக் கொண்டு நீ திறந்துவிடு. ஆனால் கடு நிசிவரை, அவள் தூக்கத்தி லாழ்ந்து விடும் வரை நீ காத்திருக்க வேண்டும்".

அரை மணி நேரம் கழித்து அவனுக்கு சிறு பார்சல் கிடைத்தது. முத்திரையை நீக்கித் திறந்து பார்த்தபோது அவற்றில் சில நுட்பக் கருவிகள் இருக்கக் கண்டான். அவற்றில் இரு விநோத கருவிகளைக் கையிலெடுத்துக் கொண்டு, படுக்கை அறைக் கதவில் அவற்றை விட்டு ஒருமணி நேரம் குடைந்து கொண்டிருந்தான். ஒரு மணி நேரத்துக்குப் பிறகு பின்புற மிருந்து சாவியைத் திருப்புவதில் வெற்றி கண்டான். சாப்பாட்டு வேளையில், மரியமின் படுக்கை யறையில் பேசும் குரல் கேட்டது. கதவுப் பக்கமாக பதுங்கி நின்று ஒற்றுக் கேட்டான். தடித்த மாதின் பேச்சும் தட்டுகளின் ஓசையும் கேட்டு புன்னகை பூத்தான்.

அறைக்குத் திரும்பி நாற்காலியில் அமர்ந்ததும் டெலிபோன் மணி ஒலித்தது. உபசரணைக் குமாஸ்தா பேசினாள்.

"உங்களைப் பெண்ணொருத்தி காண விரும்புகிறாள். நீங்கள் வந்து விட்டுப் போவீர்களா என்று அவள் கேட்டாள். மிக முக்கியமான விஷயம் என்று சொல்லுகிறாள்"

"அவள் யார்?"

"ஜீனத்துன்னிஸா"

"ஜீனத்தா!" அவன் தயங்கினான் "இங்கு அவளை அனுப்பி வையும்"

மரியமின் அறைக் கதவை மறைப்பதற்காக திரையை இழுத்து விட்டான்.

கரீமுல்லா கானின் சமையல் காரியை பார்த்ததும் அவள் அவசரமாக புறப்பட்டு வந்திருக்கிறாள் என்பது புலனாயிற்று.

"ஜீனத்! என்ன விசேஷம்?"

"மரியம் எங்கே?"

திரையிட்ட அறையை அவன் சுட்டிக் காட்டினான்.

"அவளை உள்ளே விட்டுப் பூட்டி விட்டிருக்கிறீர்களா?"

"உண்மையை உரைக்குமிடத்து, அவளே உள்ளே சென்று பூட்டிக் கொண்டாள்."

"ஆ! அப்படியா சங்கதி?" அவள் கடுமையாகக் கேட்டாள். "உங்களுக்கு இன்னும் அவகாசம் இருக்கிறது"

"முட்டாள் தனமான எண்ணங்களை விட்டு விடு. நான் யார் என்பதை அவளிடம் சொன்னதைத் தொடர்ந்து சச்சரவு மூண்டது. விஷயம் அவ்வளவுதான். நீ வந்த காரியம் என்ன?"

“கைத் துப்பாக்கி சகிதம் கான் சாஹிப் புறப்பட்டு விட்டார்; அவ்வளவுதான்” அவள் இவ்வாறு சொன்னதும் அவன் வெல வெலத்துப் போனான்.

“உட்கார்ந்து நீ, சொல்ல விரும்புவதை விவரமாகச் சொல்”

“நீங்கள் சென்ற பிறகு நான் எனது அறைக்குச் சென்றேன். மனக் கவலையோடு போனேன். மற்றொரு மங்கையுடன் மனதுக்கிசைந்த மனிதனொருவன் செல்வதை உயிருள்ள எந்தப் பெண்ணும் சகித்துக் கொண்டிருக்க மாட்டாள் ... ...”

“உணர்ச்சி வசப்படாமல், உண்மை நிலையை உரை” காதர் கர்ஜித்தான்.

“நீங்கள் தவறாக எண்ணாதிருந்தால் எனது போக்கில் நான் சொல்வேன்”

“நல்லது, விஷயத்தைச் சொல்.”

“எனது அறைக்குக் கீழே தான் கான் சாஹிபின் அறை உள்ளது. நான் உள்ளே சென்ற சிறிது நேரத்துக்குள் அவர் தமக்குள்ளேயே பேசிக் கொண்டிருந்தது கேட்டது. ஆவல் மேலிடவே கவலை மறைந்தது. கீழே சென்று ஒற்றுக் கேட்டேன். அவர் என்ன சொல்லிக் கொண்டிருந்தார் என்பதை என்னால் கேட்க முடியவில்லை. எனவே, அவரது அறைக் கதவைச் சிறிது திறந்தேன். அவர் அப்போது தான் உடை மாற்றியிருந்தார். நான் உள்ளே சென்ற சமயத்தில் துப்பாக்கிக்குள் ரவைகளைப் போட்டுக் கொண்டிருந்தார். சட்டைப் பைக்குள் துப்பாக்கியை அவர் மறைத்து வைப்பதைப் பார்த்து விட்டு வந்து விட்டேன். சிறிது நேரத்துக்குப் பிறகு அவர் வெளியே வந்தார்; அவரது முக பாவனையும் தோற்றமும் கடூரமாக காணப்பட்டன. கண்களில் கனல் கக்கியது; முகத்தில் ஈயாட வில்லை, காரைக் கொண்டு வருமாறு அவர் உத்தர விடுவதைக் கேட்டேன். பின்னர் நான் சமையலறைக்குச் சென்று விட்டேன். அவர் உடனே சென்று விடுவார் என நினைத்திக் கொண்டேன். ஆனால் அரைமணி நேரத்துக்குப் பிறகுதான் அவர் புறப்பட்டார்.”

“அவன் என்ன செய்து கொண்டிருந்தான்?” “அவரது அறையில் அமர்ந்து எழுதிக் கொண்டிருந்தார். அவர் என்ன எழுதினார் என்பது எனக்குத் தெரியாது. அவர் அதிகமாக எழுதியிருக்க வேண்டும். ஏனெனில் மேஜை அறையில் ஆறு காகிதங்கள் இருந்தன; அவர் சென்றதும் நான் உள்ளே போய்ப் பார்த்த போது ஒரு காகிதம் கூட இல்லை. குப்பைக் கூடையிலும் காகித மெதுவும் கிழித் தெறியப் பட்டிருக்க வில்லை; எந்த காகிதத்தையும் அவர் கொளுத்திப் போட்டிருக்கவுமில்லை. எனவே, எல்லா காகிதங்களை

18065

யும் எடுத்துச் சென்றிருக்க வேண்டும். டெலிபோனில் உங்களை நான் அழைத்தேன்; அப்போது நீங்கள் வரவேயில்லை. ஆகவே, நேரில் வருவதென முடிவு செய்தேன்.''

''நீ எப்படி வந்தாய்?—ரயிலிலா அல்லது காரிலா?''

''டாக்ஸியில் வந்தேன். இரண்டு மணி நேரம் வரையில் ரெயில் கிடையாது.''

''வழியில் உனது எஜமானரைக் காண வில்லையா?''

அவள் தலை அசைத்தாள்.

''நான் பார்த்திருக்க இயலாது. அவரே கார் ஓட்டி வந்தார். அவாது கார் மிக வேகமாகச் செல்லக் கூடியது.

காதர் கான் நகம் கடிக்கலானான்.

''கரீமுல்லாவின் துப்பாக்கி எவ்விதத்திலும் எவ்வளவும் எனக்கு கவலை அளிக்க வில்லை.'' சிறிது நேரத்துக்குப் பிறகு அவன் சொன்னான். ''ஏனெனில் குறி பார்த்துச் சுடுவதில் அவன் கை தேர்ந்தவனல்ல.''

டெலிபோனை எடுத்து தகப்பனரைக் கூப்பிட்டான் அவன் ஜீனத் சொல்லிய விருத்தாந்தத்தைச் சுருக்கமாகச் சொன்னான்:

''இப்போது இங்கு எனக்குப் பாதுகாப்பு அளித்தாக வேண்டும்.''—கவலையோடு அவன் வேண்டிக் கொண்டான். ''கரீமுல்லாவுக்குத் தெரிந்து விட்டது.''

நீண்ட நிசப்தம்.

அவனிடம் சிப்கத்துல்லா சொல்லியிருக்க வேண்டும். அவன் அவ்வாறு செய்வான் என்று நான் கனவிலும் கருத வில்லை.''—கரீம் ஷரீப் சொன்னான்.

''ஹோட்டலுக்குள்ளேயே இரு; வெளியே செல்லாதே, முன், பின் புற வாயில்களைக் கண்காணிப்பதற்கு சில ஆசாமிகளை அமர்த்துகிறேன். சுற்று வட்டாரத்தில் கரீமுல்லா காணப்பட்டால் அவன் அங்கேயே சுட்டு வீழ்த்தப் படுவான்.''

ரிஸீவரை மெதுவாகக் கீழே வைத்து விட்டு ஜீனத்திடம் வந்தான் காதர்.

''உனக்கு வந்தனம், ஜீனத் எனக்கு நீ செய்யக் கூடியதெல்லாம் இது தான்.''

''எனக்கு நீங்கள் செய்யக் கூடிய தெல்லாம் ஒன்று மில்லை. இப்போது என்ன நிகழப் போகிறது? உங்களுக்கு உண்மை நிலையை உரைத்து விட்டேன். ஆனல் நீங்கள் தட்டிக் கழிக்கப் பார்க்கிறீர்

கள். தலாக் பெற்று பிரபல்ய மடையப் போகும் விவாகம் என்று எடுத்துரைத்திர்கள். உங்கள் பேச்சில் நான் சந்தேகங் கொள் கிறேன்.”

“அப்படியானால் அறிவுள்ள அணங்கு நீ.” அவன் கூறிய தன் அர்த்தம் அறியாமல் அவள் சிறிது நேரம் தயங்கினாள்.

“நான் அறிவுள்ள அணங்கு என்று சொன்னீர்கள்? நீங்கள் கூறிய தன் பொருள்......”

“என்னிஷ்டப்படி எதேச்சையாக எந்த காரியமும் செய்வதற்கு எனக்கு உரிமை உண்டு.” சாய்வு நாற்காலியில் நீட்டிப் படுத்து கால் களை ஒன்றன் மேல் ஒன்று வைத்துக் கொண்டே அவன் சொன்னான். “அழகிய, அன்பான மனைவியை நான் பெற்றிருக்கிறேன்; இப்போ தைக்கு நமது காதல் நாடகம் முடிந்து விட்டதென்றே கொள்ள வேண்டும்.”

“அவ்வாறு நீங்கள் நினைக்க வில்லையல்லவா? என்னை திணறச் செய்கிறீர்கள். நான் சாஹிபின் பணத்தில் பங்கு பெறுவது தான் இந்த திருமணத்தின் நோக்கம் என்று தானே நீங்கள் சொன்னீர்கள்? உங்கள் தந்தையும் அதைத் தானே சொன்னார்? நான் சாஹிப் மீது பழி சுமத்தி பணம் பறிக்கப் போவதாக அல்லவா அவர் சொன்னார்?”

“இதற்கிடையில் பெண்ணை நான் கூட்டிக் கொண்டு வந்து விட் டேன். எனவே, குதித்துக் கூத்தாடுவதில் பயனில்லை. நாம் சுகம் அனுபவித்து விட்டோம்.

வாழ்க்கையில் மாறுதல் வேண்டு மல்லவா? மாறுதல் இல்லாத வாழ்க்கை வளமற்ற, வரண்ட வாழ்வு அன்றோ?”

அவள் துள்ளி யெழுந்து அவனையே உற்றுப் பார்த்தாள்.

“நமது காதல் நாடகம் முற்றுப் பெற்று விட்டது என்று விரட் டப் படுவதற்காகவா ஆறுமாத காலம் அடிமை வேலை செய்து உங் களுக்கு உளவறிந்து சொல்ல உழைத்தேன்?” கார சாரமாக அவள் வினவினாள். நீங்கள் என்னை ஏமாற்றி விட்டீர்கள். உங்களுக்குச் சரியான பாடம் கற்பிக்காவிடில் என் பெயர் ஜீனத் இல்லை.”

“இல்லை, கிடையாது.” காதர் கான் கூறினான். ஒரு சிகிரெட் எடுத்துப் பற்ற வைத்தான். “உனது பெயர் ஜீனத் கிடையவே கிடை யாது. என்னிடம் நீ பொய் சொல்லிக் கொண்டிருக்க வில்லையாயின், உனதுபெயர் ஜமீலா. ஜீனத், அறிவுள்ள அணங்காக நடந்து கொள். உனக்காக ஐந்நூறு ரூபாய் எடுத்து வைத்திருக்கிறேன்.”

“கள்ள நோட்டு கிடையாதல்லவா?” அவள் பரிகாசம் செய் தாள். ஆனால் அவ்விதம் சுலபமாக நீங்கள் தப்பித்துக் கொள்ள முடியாது. ஆரம்பத்திலிருந்து கடைசி வரை நீங்கள் என்னை

ஏமாற்றி வந்திருக்கிறீர்கள். உங்கள் உறுதி மொழியைச் செயலளவில் நீங்கள் நிறை வேற்ருவிடில் நான்....''

''என்னைக் காட்டிக் கொடுத்து விடுவேன் என்று சொல்லாதே.'' பரிகாசம் செய்யும் தோரணையில் கண்களை மூடியவாறு அவன் சொன்னான். ''நீங்களெல்லோரும் காட்டிக் கொடுத்து காசு பறிப்பவர்கள். உங்களைக் கண்டால் எனக்குப் பிடிப்பதில்லை. என்னைக் காட்டிக் கொடுக்காமலிருப்பதற்காக ஏதாவது கொடுப்பேன் என்று எண்ணுகிருயா? இல்லை, அஃது அவ்வாறில்லை. போலீஸாருக்குத் தெரிந்த அளவு என்னைப் பற்றி உனக்கும் தெரியும். சிப்கத்துல்லாவுக்கும் உண்மை தெரிந்து விட்டிருக்கிறது. எனது புது மனைவிக்கும் விஷயம் தெரியுமாதலால் அவளிடம் சொல்லி என்னை துன்புறுத்த முடியாது. கரீமுல்லா கானும் அறிவான். என்னைப் பற்றிய உண்மையும் இரகசியமும் நாலுபேர் அறிந்திருக்கின்றனர்; நாளை பத்திரிகைகளில் என்னைப் பற்றி எவனாவது கதை கட்டி விட்டாலும் வியப்படைய மாட்டேன். இங்கிலீயில், என்னைப் பற்றி எவரிடமும் எடுத்துரைப்பதால் எனக்கு எள்ளளவும் கவலை அல்லது பயம் கிடையாது.''

மணிபர்ஸ் எடுத்து திறந்து, ஒரு கோட்டுக் கத்தையிலிருந்து ஐந்து கோட்டுகளை வெளியே எடுத்து மேஜை மீது வீசியெறிந்தான்.

''இதோ, உனது கூலி, ஞாபகச் சின்னமாகவும் இதை எடுத்துக் கொள்.''

அந்த ஐந்து நூறு ரூபாய் கோட்டுகளையும் மெதுவாக எடுத்து மடித்து, கைப் பைக்குள் திணித்துக் கொண்டாள். அவளது கண்களில் கனல் வீசியது; அவளது முகம் வெளுத்து விட்டது

ஆத்திரத்தோடு அந்த கோட்டுக்களை எடுத்து அவனது முகத்தில் அவள் வீசியெறிந்திருந்தால் அதனை அவனல் புரிந்து கொண்டிருக்க முடியும்; அதற்காக அவன் ஆயத்தமாகவும் இருந்தான். அவன் எழுந்திருந்து கதவு தாழ்ப்பாளைக் கையில் பிடித்துக் கொண்டு நிற்கும் வரை எதுவும் பேச வில்லை.

''உம்மைப்பின் தொடர்ந்து பிடிப்பதற்காக மூன்று பேர் கிளம்பியிருக்கிறார்கள்,'' அவள் அமைதியாகச் சொன்னாள். போலீஸ் ரஸாக், சிறைப் பறவை சிப்கத்துல்லா, கான் சாஹிப் கரீமுல்லா ஆகியவர்களிலொருவர் உம்மைப் பிடித்து விடுவார். அந்த மூவரும் அவ்வாறு செய்வதில் தோல்வியுற்று விடுவார் களாயின், அம் முயற்சியில் நான் வெற்றி காண்பேன் என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம்.''

இந்த பயமுறுத்தலுடன், படாரென கதவை மூடி விட்டு அவள் புறப்பட்டாள். பெரிய காரியம் சாதித்து விட்டவனைப் போல பரம திருப்தி யோடு பத்திரிகை யொன்றை எடுத்து காதர் படிக்கலானுன்.

(தொடரும்)

3-வது பகுதி

# உடல் அமைப்பின் தத்துவம்.

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

## குட்டி போட்டுப் பால் கொடுக்கும் பிராணிகளின் வாழ்க்கை

ஆண்டவன் படைத்த ஜீவ-ஜந்து-பிராணிகளில் எத்தனையோ வகைகள் இருக்கின்றன. அவற்றின் உடல் அமைப்பின் தத்துவங்களும் பலப்பல வகைகளாய் இருக்கின்றன.

முட்டை யிட்டு எங்கேனும் போட்டுவிட்டு அதைப் பற்றிக் கவலை யில்லாமல் எதேச்சையாய் போய்விடும் நீர் வாழும் ஜந்துக்களான மீன் ஒருவகை முட்டை யிட்டு அதன் மீது உட்கார்ந்து அடைகாத்துக் குஞ்சு பொறித்து வளர்க்கும் தன்மையுள்ள பட்சி இனங்கள் மற்றொரு வகை.

இன்னொரு வகை, குறிப்பிட்ட காலம் சிசுவை கர்ப்பத்தில் வைத்திருந்து பிறகு குட்டியாக பிரசவித்து (குட்டி போட்டு) தன்னுடைய மடியாகிய தனத்திலிருந்து பால் கொடுத்துக் குட்டியை வளர்க்கும் தாய்த் தன்மையுள்ள ஜீவப் பிராணிகளாகும்.

சிறுவர்களே! நீங்கள் வீட்டில் பூனையையும் அதன் சின்னஞ்சிறு குட்டிகளையும் பார்த்திருக்கலாம். இரண்டொரு நாட்களுக்கு முன், தன்னந்தனியாக திரிந்து உலாவிக் கொண்டிருந்த அந்தப் பெண் பூனை, இன்று இரண்டு மூன்று குட்டிகளோடு வந்திருக்கிறதே இதென்ன அதிசயம்! இந்தக் குட்டிகள் இந்தப் பெண் பூனைக்கு ஏது?

## பூனையின் பிரியமான செயல்

இந்தப் பெண் பூனை, தன்னுடைய சரீரத்திலிருந்து வெளிப்படுத்திய குட்டிகள்தான் அவை. இந்தப் பூனை தன் சிறிய குட்டிகளை வாயினால் கௌவி தூக்கிக் கொண்டு போவதைப் பார்த்திருப்பீர்கள். அது தன் குழந்தைகளான குட்டியை, கையினால் தூக்க முடியாது. ஏனெனின் அதற்கு கை கிடையாது. நான்கு கால்கள் தான் உண்டு. ஆகையால், குட்டிக்கு வலிக்காமல், பல் குத்தாமல், வாயினால் மெல்ல கௌவிப் பிடித்து தூக்கிக் கொண்டு போகிறது.

சரி, தாய் பூனை படுத்துக் கொண்டிருப்பதையும், அதன் குட்டிகள் மடியில் தவழ்ந்து பால் குடித்துக் கொண்டிருக்கும் அன்பு மயமான காட்சியையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். இது எவ்வளவு அருமையான, பிரியமான செயல் பார்த்தீர்களா ?

இதே மாதிரி தான் நாய், ஆடு, மாடு, புலி, கரடி, சிங்கம், யானை முதலிய நாற்கால் பிராணிக ளெல்லாம், கர்ப்பம் சுமந்து பிரசவித்து (குட்டி போட்டு) பால் கொடுத்து, பிள்ளைகளை (குட்டிகளை) வளர்த்துக் காப்பாற்றிப் பெரியவைக ளாக்குகின்றன.

## பூனைக்குட்டியும் கோழிக்குஞ்சும்

பிள்ளைகளே! பூனைக்குத் தன் குட்டியிடம் பிரியம் இருப்பதைப் போல், கோழிக்கும் தன் குஞ்சுகளிடம் பிரியம் இருப்பதை நீங்கள் பார்க்கலாம். பூனை தன் குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்ப்பதைப் போல் தான், கோழியும் தன் குஞ்சுகளைக் கூடவே அழைத்துச் சென்று, தரையி லிருந்து எதையோ (தீனி) எடுத்துத் தின்ன கற்றுக் கொடுக்கிறது. கோழியின் குஞ்சுகள், முட்டையி லிருந்து வெளி வந்து கொஞ்ச நேரத்திலேயே அவை, நடக்கவும் ஓடவும் தரையி லிருந்து, (தாய் சொற்படி கேட்டு) எதையும் எடுத்துத் தின்னவும் கற்றுக் கொள்கின்றன.

ஆனால், பூனைக்குட்டி, நாய்க்குட்டி, ஆட்டுக்குட்டி போன்றவை பிறந்தவுடன் எழுந்து நிற்கவும் சக்தி யில்லாமல், போட்ட இடத்திலேயே கிடக்கின்றன. அதற்கு தாய்ப்பூனை, அல்லது தாய் ஆடு–மாடு, தன் மடியிலிருந்து பால் கொடுத்து மெல்ல மெல்ல வளர்க்கின்றன.

பிறகு, குட்டிகள் ஓடி ஆடி பெரியவைகளானதும், தாய்ப் பிராணிகள், அவற்றிற்கு சுயமே, ஆகாரம் எடுத்துத் தின்னவும் தேடித் தின்னவும் கற்றுக் கொடுத்து, தன்னை விட்டு பிரித்து விடுகின்றன. எனவே, பெரிய குட்டிகள், தாயை விட்டுத் தனியே போய் தேடியலைந்துத் தன் பசியைப் போக்கிக் கொண்டு உயிர் வாழ்கின்றன.

## பிராணிகளின் கர்ப்ப காலம் எவ்வளவு

கோழியின் வயிற்றி லிருந்து முட்டையும், பூனையின் வயிற்றி லிருந்து குட்டியும், தாயின் வயிற்றி லிருந்து பிள்ளையும், திடீரென்று உற்பத்தியாகி திடீரென்று வெளியே வந்து விடுபவை யல்ல. ஜீவப் பிராணிகளின் கர்ப்பக் கோளறையில் விந்துவும் நாதமும் கலந்து, சினையாகிப் பெருகி, பல நாள் அல்லது பலமாதம் வளர்ந்துப் பெரியவையான பிறகே, சிரமத்தோடும் வேதனையோடும் வெளிப் படுகின்றன.

பொதுவாக குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கும் பிராணிகளின் வயிற்றில், கர்ப்பத்தில் குறைந்தபக்ஷம் 'மூன்று மாதம்' சூல்

கொண்டு தரிபட்டு (கர்ப்பமாய்) இருந்த பின்னரே, பிரசவிக்கின்றன. இதற்கு 'கர்ப்ப காலம்' என்று பெயர்.

நாய்களுக்கு கர்ப்ப காலம் 9 வாரங்களாகும்; அதாவது இரண்டரை மாதங்கள். பசு மாடுகளுக்கு பூர்ணமாக 9 மாதங்களாகும். யானைகளின் கர்ப்ப காலம் 22 மாதங்களாகுமாம்.

பிராணிகளில் யானையின் கர்ப்ப காலம் நீண்ட தவணை யுடையதாகும். யானையைவிடப் பெரிய ஜீவன் களும், ஆண்டவன் படைத்த உலகத்தில் இருக்கின்றன. அவைகளைப் பற்றிய விளக்கம் நமக்குத் தெரியாததால், அவைகளின் கர்ப்ப காலம் பற்றியும், பிரசவ முறை பற்றியும் நமக்குத் தெரியாது. நம்முடைய உலக வாழ்க்கையில், நம்முடைய ஊரிலும் வீடு வாசலிலும் நம்மோடு சேர்ந்து வாழும் ஜீவ ஜந்துப் பிராணிகளின் வாழ்க்கை முறை கொண்டேதான், நாம் மேற் கண்ட விஷயங்களை எடுத்துரைக்க வேண்டி யிருக்கிறது.

## மனிதக் குழந்தைகளின் மாண்பு

அல்லாஹு தஆலா படைத்த பலகோடி படைப்பினங்களில் மனித இனம்தான் சிரேஷ்டமானது. எனவே, மனிதர் 'அஷ்ரபுல் மக்லூக்காத்' என்று அழைக்கப் படுகிறார்கள். மனிதர்க்கு எல்லா வகை அறிவுமுண்டு. ஜீவ ஜந்துப் பிராணிகளுக்கு ஐயறிவு கிடையாது; ஈரறிவு, மூவறிவு, நாலறிவுதான் உண்டு. மனிதர்க்கு ஐயறிவும் ஆறறிவும் உண்டென்று கூறப்படுகிறது.

இத்தகைய சிருஷ்டிச் சிறப்பும், பிறப்பு மாண்புமுடைய மனிதரின் உடல் அமைப்பும், பிறப்பு வளர்ப்பும், மகா அபூர்வமானதாகும். குட்டி போட்டு, தனத்தில் பால் கொடுத்து வளர்க்கும் ஜீவப் பிராணிகளில் மனிதர்தான் முதன்மையும் மாண்பும் உடையவர். எனவே, மற்ற பிராணிகளைப் பற்றி நாம் ஆராய்ச்சி செய்து தெரிந்து கொள்வதைக் காட்டினும், மனித உற்பத்தி வரலாற்றைப் பற்றித் தெரிந்து கொள்வதுதான் மகா முக்கியமானதாகும்.

## மனிதக் குழந்தைகளின் பலஹீனம்

அஷ்ரபுல் மக்லூக்காத் தாகிய மனிதன் மகா சக்தியும் அபார அறிவும் உடைய சீரிய இனம் என்பது வாஸ்தவமே. ஆனால் மனிதன் மகா பலஹீனனாகவும் படைக்கப் பட்டிருக்கிறான். 'குலிகல் இன்ஸான லயீபா' (மனிதன் பலஹீனனாக படைக்கப் பட்டிருக்கிறான்) என்று ஆண்டவனே கூறி யிருக்கின்றான்.

பிள்ளைகளே! உங்கள் தம்பியோ தங்கையோ, பிறந்தபோது அந்த 'பாப்பா' எப்படி இருந்ததென்று உங்களுக்கு ஞாபக மிருக்கிறதா? அம்மாவுக்கு 'பாப்பா' பிறந்தபோது எவ்வளவு சிறியதாயும்,

அரியதாயும், காஸுக்காகவும் இருந்ததல்லவா? அதைத் தொட்டால் கூட, 'கொழ கொழ' வென்று மிகவும் மிருதுவாக இருக்க வில்லையா? அப்போது அந்தப் பாப்பாவுக்கு என்ன தெரியும்? ஒன்றுமே தெரியாது! கையையும் காலையும் ஆட்டி அசைத்து 'குவா குவா' என்று அழத்தான் தெரியும். பாப்பா வாகிய குழந்தை அழுதால், அம்மா அதற்கு தன் மார்பகத்தின் தனத்திலிருந்து பால் புகட்டுவார். அதாவது அழும் குழந்தையின் வாயில் மார்பக தனத்தின் நுனியை வைத்ததும், அந்த சின்னஞ்சிறு சிசு, தன் அருமை வாயினால் சுவைத் துச் சுவைத்து பாலை இழுத்துக் குடிக்கும்.

பசி தீர்ந்ததும் குழந்தை சிரிக்கும். வாய் திறந்து 'ஆ—ஆ—' என்று மழலை பேசும். அதைக் கேட்டு, அந்தக் குழந்தைகளின் விளையாட்டைப் பார்த்து, தாயாரும் நாமெல்லோரும் சந்தோஷப் படுகிறோம். அப்போது குழந்தையினால் புரண்டு படுக்கவோ, எழுந்து உட்காரவோ முடியாமல் அவ்வளவு பலஹீனமாக (லயீபாக) இருக்கும்.

## நமது வளரும் குழந்தைகள்.

இங்ஙனம் நமது குழந்தைகளாகிய பாப்பா நாலைந்து மாதம் வரை, போட்ட இடத்திலே தான் கிடக்கும். அதன் பின்பே அது உட்காரவோ, கைகளையும் கால் முட்டுக்களையும் ஊன்றி தவழ்ந்து செல்லவோ தொடங்குகிறது. ஒரு வருஷம் கழிந்த பிறகு தான் அது நன்றாய் நிற்கவும், தத்தித் தத்தி தளர் நடை நடக்கவும் கற்றுக் கொள்கிறது.

ஆகார விஷயங்களிலும் நம் குழந்தைகள், மற்ற ஜீவஜந்துப் பிராணிகளை விட வேறு பட்டவைகள் தாம். குறைந்த பக்ஷம் நம் குழந்தைகள் ஓராண்டு வரை, தாய் பாலினாலேயே வளர்க்கப்படுகின் றன. ஓராண்டுக்குப் பிறகு தான், தாய்மார்கள் தம் குழந்தைகட்குத் தம் தனத்தில் பாலுடன் பசும் பாலையோ, எளிதில் ஜீரணமாகும் குழைந்தச் சோறு போன்ற சிற்றுண்டியையோ தருகிறார்கள். இங் ஙனமே நம் குழந்தைகள், மிகவும் தாமதமாகவே வளர்கின்றன.

(தொடரும்)

18706

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

அலிறலியல்லாஹூ அன்ஹூ அவர்களின் மகனார்

# முஹம்மது ஹனீபா யுத்த சரித்திரம்

இதில் ஹஸ்ரத் முஹம்மது ஹனீபா அவர்களின் தாயாராகிய ஹனீபா பீவியுடன் அலி றலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் யுத்தஞ் செய்து ஜெயித்து, அவர்களை நிக்காஹ் செய்து விட்டுப் போனதும், பிறகு ஹஸ்ரத் முஹம்மது ஹனீபா பிறந்து தாயிடம் வளர்ந்து தமது பிதாவாகிய அலி றலியல்லாஹூ அன்ஹூவைத் தேடிச் சென்று பிதா வென்று அறியாமல் யுத்தம் புரிந்ததும் பிறகு ஹஸ்ரத் முஹம்மது ஹனீபா அவர்கள் பூததேவுகளுடன் யுத்தம் புரிந்து பீவி ஸைனுல் அறபை விவாகம் செய்ததும், ஹஸ்ரத் இமாம் ஹூஸைன் றலியல்லாஹூ அன்ஹூ அவர்களை எஸிது என்பவன் ஷஹீது செய்து, ஹஸரத் இமாம் ஸைனுல் ஆபிதீன் அவர்களையும் ஹஸ்ரத் நபி நாயகம் அவர்களின் வீட்டாரையும் சிறையிட்ட விஷயமாகத் தாங்கள் புறப்பட்டு போகும் போது உமர் அலி, தாலிப் அலி, ஆகில் அலி, முஸிப்கான், இப்ருஹீம் உஷர்த்து, தோஹான் மோஹான் முதலிய பிரக்யாதி பெற்ற வீரர்களோடு மதீனமா நகரஞ் சென்று உத்பா வலீது என்பவர்களுடனும், மர்வானுடனும் எஸீதுடனும் பல ஊர்களில் பலவிதமாய் மகா வீரியத்துடன் அதிசயிக்கத் தக்க விதமாய் யுத்தஞ் செய்து எஸீதுடைய படைகளை முறிய அடித்தும் ஜெயித்தும், மர்வானுடைய மூக்கையும், காதையும் அறுத்தும் ஹூஸைன் றலியல்லாஹூ அன்ஹூடைய பழிக்கு பதில் பழி வாங்கி சிறையை மீட்டியதும், ஹஸரத் ஸைனுல் ஆபிதீன் அவர்களைப் பட்டத்தில் உட்கார வைத்ததும், எல்லா அரசாங்கத்தையும் தங்களுக்குள்ளடக்கி ஆண்டதுமான எல்லா விஷயங்களும் மிக அருமையாயும் தெளிவாயும், எழுதப் பட்டிருக்கிறது.

புதிய பதிப்பு கலிகோ பைண்டு ரூ. 3

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹூல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

2c

# தாரீகுல் குலபா

## இஸ்லாமிய கலீபாக்களின் அரசாங்க சரித்திரங்கள்

நமது இஸ்லாமிய கலீபாக்களின் சரித்திர விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது எல்லா முஸ்லிம்களுக்கும் அத்தியாவசியமான கடமையாகும். ஏனெனில் இச்சரித்திரங்களில் இஸ்லாமின் ஆரம்பமும், இஸ்லாத்தை நிலை நாட்டிய தத்துவங்களும், இஸ்லாத்தின் பக்தி விசுவாசங்களும், இஸ்லாத்தின் சமத்துவங்களும், இஸ்லாத்தின் நீதி பரிபாலனங்களும் ஒருங்கே நிறைந்திருக்கின்றன. ஆதலின், இம்மகிமை பொருந்திய சரித்திரங்களை ஒவ்வொரு முஸ்லிமும் முஸ்லிம் அல்லாதாரும் அவசியம் வாசிக்க வேண்டும்.

இதில் முதற் பாகமாக நம் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரித்திரமும், முதல் கலீபாவாகிய ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரமும் அடங்கியது கிளேஸ் காகிதத்தில் கிரௌன் 8-பேஜ் ஸைஸில் அச்சிடப்பட்டு பைண்டு கட்டியது. விலை ரூ 1–60

மேற்படி இரண்டாவது பாகம்: இதில் ஹஸரத் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரம் விரிவாய் எழுதப் பெற்றது. விலை ரூ. 1–32

மேற்படி மூன்றாம் பாகம்: இது ஹஸரத் உஸ்மான் (றலி) அவர்களின் கிலாபத்தும், ஹஸரத் அலி (ரலி) அவர்களின் கிலாபத்தும், ஹஸரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்களின் கிலாபத்தும், பனீ உமையாவின் கிலாபத்தும், அப்துல் மலிக் அவர்களின் கிலாபத்தும், ஆக 5-கிலாபத்து ஆட்சி வரலாறுகள் அடங்கியது. விலை ரூ. 1–32

ஷை மூன்று பாகமும் சேர்ந்தது ரூ. 3–60

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.